ஜனவரி - பிப்ரவரி 2025 தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



# ஆசாரியத்துவத்தை வளர்த்தல்


- ஆசாரியத்துவத்தின் மாதிரி
- ஆசாரியர்கள் நல்லவர்களாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும்
- நல்லதைக் கற்பிக்க ஆசாரியர்கள்
- ஆசாரியர்கள் அனுதாபத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்
- ஆசாரியர்கள் தன்னடக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்
- ஆசாரியர்கள் விசுவாசமாக இருக்க வேண்டும்
- ஆசாரியர்கள் இரக்கத்தையும் அன்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்
- ஆசாரியர்கள் ஜனங்களை ஆசீர்வதிக்க வேண்டும்
- திரள் கூட்டமும் ஊழியம் செய்கிறது
- மெல்கிசேதேக் ஆசாரியர் மற்றும் இராஜா

# ஆசாரியத்துவத்தை வளர்த்தல்



## ஆதியிலே

கிறிஸ்துவின் இராஜ்யத்தில் பூமியிலுள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஒரு ஆசாரியனாக மாறுவதற்கு நாம் இப்போது கற்றுக்கொள்ள வேண்டியதை இந்த "ஆசாரியத்துவத்தை வளர்த்தல்" எனும் இந்த இதழ் நமக்கு நினைப்பூட்டுகிறது.

லேவிய ஆசாரியத்துவம் விசுவாசமுள்ள சபையை எவ்வாறு முன்னறிவித்தது என்பதை"நிழலான ஆசாரியத்துவம்" என்ற பாடம் விளக்குகிறது. ஆசாரியர்கள் ஆசீர்வதிக்கும் முன் பலியிடுவார்கள்.

இன்றைய ஆசாரியர்கள் பயிற்சியில் வளர்த்துக்கொள்ள வேண்டிய ஏழு குணலட்சணங்கள், "நல்லவர்களாகவும் நேர்மையான எடுத்துக்காட்டுகளாகவும் ஆசாரியர்கள் இருக்கவேண்டும்" என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளன. நீங்கள் பார்க்க விரும்பும் முன்மாதிரியாக நீங்கள் இருங்கள். நமது உதாரணத்தால் உலகம் கற்றுக் கொள்ளும்.

"**ஆசாரியர்கள் நல்லதை போதிக்க வேண்டும்**" எனும் தலைப்பு அனைத்து காலங்களுக்கும் பொருந்தும் அடிப்படை கிறிஸ்தவ நம்பிக்கைகளை சுருக்கமாக விளக்குகிறது, பின்னர் ஒரு குறிப்பிட்ட நூற்றாண்டிற்கோ அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கோ உட்பட்ட சில விஷயங்களை குறிப்பதாகவும் உள்ளது. சுவிசேஷத்தை இலவசமாகக் கற்பியுங்கள்.

நாம் இரக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற படிப்பினையை, "ஆசாரியர்கள் பரிவை கற்றுக்கொள்ள வேண்டும்" என்ற பாடம் கூறுகிறது. அப்போதுதான் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் நாம் உலகிற்கு பரிவை காட்ட முடியும்.

"**ஆசாரியர்கள் சுயக் கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும்**" என்ற பாடம், ஜெயங்கொள்பவர்களிடம்அத்தியாவசியமான சுயக் கட்டுப்பாட்டை வளர்ப்பதற்கான வழிகளை பரிந்துரைக்கிறது. நாதாபும் அபியுவும் ஒரு மோசமான எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை மாம்சத்திலே நிறைவேற்ற" நாம் என்ன செய்ய வேண்டும் என்பது விளக்கப்பட்டுள்ளது.

"**ஆசாரியர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்**" என்ற பாடம், நல்ல மற்றும் கெட்ட லேவிய ஆசாரியர்களிடமிருந்தும், குறிப்பாக உண்மையுள்ள இயேசுவிடமிருந்தும் படிப்பினைகளை வழங்குகிறது.

"ஆசாரியர்கள் இரக்கத்தையும் அன்பையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்", இது உணர்வுகளை விட மேலானது. அவர்கள் செய்யும் செயல்களால் அவர்கள் அங்கீகரிக்கப்படுகிறார்கள். இரக்கம் வேண்டுமா ? இரக்கம் காட்டுங்கள். தேவனை நேசிப்பது, கிறிஸ்து தன் ஜீவனை அர்ப்பணித்த அனைத்து ஜனங்களையும் நேசிப்பதையும் உள்ளடக்குகிறது.

கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் ஜனங்கள் நாம் செய்த நன்மை அல்லது தீமைகளை மட்டுமே நினைவில் கொண்டிருக்க மாட்டார்கள், நம் வாழ்க்கை எவ்வாறு நன்மைக்காக மாற்றப்பட்டது என்பதையும் நினைவில் கொண்டிருப்பார்கள். "**ஜனங்களை ஆசீர்வதிப்பதற்கான ஆசாரியத்துவம்**" என்ற பாடம், தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பதற்கும் அவரைக் கனப்படுத்த விரும்புவதற்கும் வருங்காலத்தில் உலகிற்குக் கற்பிக்க நாம்எவ்வாறு பயிற்சி பெற வேண்டும் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது.

"**திரள் கூட்டத்தினரும் ஊழியம் செய்வார்கள்**" என்ற தலைப்பு, திரள் கூட்டத்தினரை எண்ணிக்கைக்கு உட்படுத்தக்கூடாததற்கான காரணங்களை விளக்குகிறது. அவர்கள் சில நேரங்களில் தவறி இருக்கலாம், ஆனால் இறுதியில் ஜெயம் பெறுவார்கள். அவர்களும் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஊழியம் செய்வார்கள்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுப்பப்படுவதற்கு முன்பு, இராஜாவாகவும் ஆசாரியனாகவும் கர்த்தருக்குச் சேவை செய்த ஒரே ஒருவரை பற்றி "மெல்கிசேதேக்கு, ஆசாரியன் மற்றும் இராஜா" என்ற பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.


**ஜனவரி / பிப்ரவரி 2025,**
**தொகுப்பு 106, எண் 6**



**ஆசாரியத்துவத்தின் மாதிரி**
ஆசாரியத்துவத்தை ஆயத்தம் செய்தல்

**ஆசாரியர்கள் நல்லவர்களாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும்**
எடுத்துக்காட்டுகள் முன்னுதாரணத்தால் வழிநடத்தப்படுகின்றன.

**நல்லதைக் கற்பிக்க ஆசாரியர்கள்**
ஆசீர்வாதங்களைக் கற்றுக்கொடுங்கள், சாபத்தை அல்லா

**ஆசாரியர்கள் அனுதாபத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்**
முதலில் சுயத்தை கட்டுப்படுத்த வேண்டும்

**ஆசாரியர்கள் தன்னடக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்**
முதலில் சுயத்தை கட்டுப்படுத்த வேண்டும்

**ஆசாரியர்கள் விசுவாசமாக இருக்க வேண்டும்**
மரணம் பரியந்தம் விசுவாசம்

**ஆசாரியர்கள் இரக்கத்தையும் அன்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்**
பாடத்தை நன்றாகக் கற்றுக்கொள்ள வேண்டும்

**ஆசாரியர்கள் ஜனங்களை ஆசீர்வதிக்க வேண்டும்**
ஆசீர்வதிக்கப்படுவதற்கு நன்மை செய்யுங்கள்

**திரள் கூட்டமும் ஊழியம் செய்கிறது**
ஆலயத்திலும் சிங்காசனத்திற்கு முன்பும்

**மெல்கிசேதேக் ஆசாரியர் மற்றும் இராஜா**
அவருடைய சிங்காசன்தில் ஒரு ஆசாரியர்(முதல்)

**இன்றைய தீர்க்கதரிசனம்**
ஆயிரமாண்டு ஆட்சியின் திட்டம்

## ஆசாரியத்துவத்தை ஆயத்தம் செய்தல்

# ஆசாரியத்துவத்தின் மாதிரி



— David Rice

"முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான், இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை, இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்"(வெளிப்படுத்தல் 20:6)

கடவுளின் திட்டத்தைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல், மீட்பிற்கு இரண்டு வெவ்வேறு யுகங்கள் இருப்பதை அங்கீகரிக்கிறது. –பரலோக அழைப்புக்கான தற்போதைய சுவிசேஷ யுகம் மற்றும் நெருங்கி வரும் ஆயிரமாண்டு இராஜ்யத்தில் பூமிக்குரிய நம்பிக்கை. மீட்பின் இந்த இரண்டு யுகங்களில் ஒவ்வொன்றிலும், அழைக்கப்பட்டவர்கள் ஒரு ஆசாரியர் அல்லது ஆசாரியத்துவத்தின் வேலையின் மூலம் கடவுளுடன் ஒப்புரவாக்கப் படுகிறார்கள், அழைக்கப்பட்டவர்களைக் கடவுளிடம் கொண்டு வந்து, பாவத்தின் நாட்டத்திலிருந்து அவர்களைத் தூய்மைப் படுத்துகிறார்கள்.

தற்போதைய சுவிசேஷ யுகத்தில், மகிமையில் உள்ள இயேசு நமது ஆசாரியராக பணியாற்றுகிறார். "மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருள் என்னவெனில், பரலோகத்திலுள்ள மகத்துவமான சிங்காசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு."(எபிரெயர் 8:1,2)இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறவராக இருக்கிறார். அவர் நமக்கு ஆதாமிய சாபத்திலிருந்து மீட்பை வழங்குகிறார், மேலும் பாவத்தின் செல்வாக்கை வெல்லவும், நம் இருதயங்களையும் நோக்கங்களையும் சுத்தப்படுத்தவும், தெய்வீகக் கொள்கைகளுக்குப் பின் இன்னும் நேர்மையாக நடக்கவும் உதவுகிறார். நெருங்கி வரும் ஆயிர வருட இராஜ்யத்தில், இயேசு மனுக்குலத்திற்கும் பிரதான ஆசாரியராக இருப்பார். ஆனால் அந்த நேரத்தில் சுவிசேஷ யுகத்தில் வளர்ச்சி அடைந்த பரிசுத்தவான்கள், உலகத்தை கடவுளுடன் சமரசம் செய்ய உதவுவார்கள். இவர்கள் "கடவுள் மற்றும் கிறிஸ்துவின்" சார்பாக "ஆசாரியர்களாக" பணியாற்றுவார்கள். அவர்கள் மனுக்குலத்தின் இதயங்களையும் நோக்கங்களையும் தூய்மைப்படுத்தவும், தெய்வீகக் கொள்கைகளைப் பின்பற்றவும், பரிசுத்தத்தின் பெறும் பாதையில் நடக்கவும் உதவுவார்கள். தனிநபர்கள் இந்தப் போக்கைப் பின்பற்றினால் மனித பரிபூரணத்தையும் நித்திய ஜீவனையும் அடைவார்கள்.

### ஆசரிப்புக் கூடாரத்தை ஆயத்தப்படுத்துதல்

இஸ்ரயேலின் கூடாரம் எவ்வாறு கட்டப்பட வேண்டும் என்பதை யாத்திராகமத்தின் கடைசி



அதிகாரங்கள் குறிப்பிடுகின்றன. இவைகள் 36ம்அதிகாரத்தில் இருந்து தொடங்குகிறது. பெசலயேல் மற்றும் அகோலியாபுடன் மற்ற உதவியாளர்களோடு இந்த கட்டுமானபணி தொடங்கியது. "மோசேயை நோக்கி - கர்த்தர் செய்யும்படி

கற்பித்த வேலைக்கு வேண்டியதற்கு அதிகமான பொருள்களை ஜனங்கள் கொண்டுவருகிறார்கள் என்றார்கள். அப்பொழுது மோசே இனி புருஷர்களாவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கையாக ஒரு வேலையும் செய்யவேண்டாம் என்று பாளயம் எங்கும் கூறும்படி கட்டளையிட்டான், இவ்விதமாய் ஜனங்கள் கொண்டுவருகிறது நிறுத்தப்பட்டது. செய்யவேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்ததும் அல்லாமல் அதிகமாகவும் இருந்தது."அப்பொழுது மோசே இனி புருஷர்களாவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கையாக ஒரு வேலையும் செய்யவேண்டாம் என்று பாளயம் எங்கும் கூறும்படி கட்டளையிட்டான், இவ்விதமாய் ஜனங்கள் கொண்டுவருகிறது நிறுத்தப்பட்டது." (யாத்திராகமம் 36:6) அப்போது ஜனங்களின் பங்களிப்பு போதுமானது என்று மோசே அறிவித்தார். "இவ்விதமாய் ஜனங்கள் கொண்டுவருகிறது நிறுத்தப்பட்டது." அவர்கள் வைத்திருந்த பொருட்கள் அனைத்து வேலைகளுக்கும் போதுமானதாக இருந்தது, மேலும் அதிகமாக இருந்தது. செய்யவேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்ததுமல்லாமல் அதிகமாயும் இருந்தது. (வசனங்கள் 6,7) கடவுளுக்கு வழிபாட்டுத் ஸ்தலத்தை நிர்மாணிப்பதில் இஸ்ரயேலர்கள் என்ன ஒரு கனிவான உள்ளமும் ஒத்துழைக்கும் மனப்பான்மையும் காட்டினார்கள்.

யாத்திராகமம் *36, 37, 38, 39:31* விவரிக்கப்பட்டுள்ளபடி வேலை தொடர்ந்தது. மீதமுள்ள வேலை யாத்திராகமம் 36, 37, 38, 39:31வரை விவரிக்கப்பட்டுள்ளபடி தொடர்ந்தது. இப்படியே ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வேலையெல்லாம் முடிந்தது, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரயேல் புத்திரர் செய்தார்கள்.(யாத்திராகமம் 39:32)வசனம் 33 இல் பொருட்கள் மோசேயிடம் ஆய்வுக்காக கொண்டு வரப்பட்டன. 43ம் வசனத்தில்,"மோசே அந்த வேலைகளையெல்லாம் பார்த்தான், கர்த்தர் கற்பித்ததுபடியே அதைச் செய்திருந்தார்கள். மோசே அவர்களை ஆசீர்வதித்தான்.

இருப்பினும், வாசஸ்தலத்தைக் கட்டுவதற்கான பாகங்களைச் சேர்ப்பதற்கு முன், "முதல் மாதத்தின் முதல் நாள்" வரை காத்திருக்கும்படி கடவுள் மோசேயிடம் கூறினார். பின்பு "நீ முதலாம் மாதம் முதல் தேதியில் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணு." (யாத்திராகமம் 40:2) இப்படியாக,இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தலம் ஸ்தாபனம் பண்ணப்பட்டது. (யாத்திராகமம் 40:17).கடவுளின் திட்டத்தில் புதிய யுகத்தின் தொடக்கத்தைப் அடையாளப்படுத்தும் படியாக ஒரு புதிய ஆண்டின் முதல் நாளுக்காகக் கடவுள் அவர்களைக் காத்திருக்கச் செய்திருக்கலாம், இது இரட்சிப்பின் முதல் யுகமாகிய, சுவிசேஷ யுகம் ஆகும். இது போன்ற ஒன்று ஆதியாகமம் *8:13* லும் காணப்படுகிறது. "அவனுக்கு அறுநூற்றொரு வயதாகும் வருஷத்தில், முதல் மாதம் முதல் தேதியிலே பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போயிற்று, நோவா பேழையின் மேல்தட்டை எடுத்துப்பார்த்தான், பூமியின்மேல் ஜலம் இல்லாதிருந்தது." ஜலப்பிரளயத்தின் முடிவில் "பூமியின்மேல் ஜலம் இல்லாதிருந்ததை" நோவா பார்த்தார். தேவபக்தி அற்றவர்களை அகற்றிய ஜலம் இப்போது இல்லை, இராஜ்யம் அறிமுகப்படுத்தப்படும் போது மனுக்குலத்தின் மரணத்தின் சாபம் முடிவடையும் நேரத்தைக் குறிக்கும் என்று இது கருதுகிறது. ஆதியாகமம் 8:13 ல் இதுவும் ஒரு புத்தாண்டின் தொடக்கத்தில் "முதல் மாதம், முதல் நாள்" அன்று நடந்தது. இவ்வாறு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், புத்தாண்டின் முதல் நாள், ஆசீர்வாதம் மற்றும் இரட்சிப்பின் புதிய யுகத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

அதன் பின் யாத்திராகமம் *40:18¬38*,ல் சேவைக்கு தயாராக இருக்கும் கூடாரம் அமைப்பதை குறித்து விவரிக்கிறது. இருப்பினும், முக்கியமான ஒன்று தேவைப்பட்டது. அதாவது கொடுக்கப்பட வேண்டிய காணிக்கைகளைப் பற்றிய வழிகாட்டுதல்கள் மற்றும் அவற்றை நிர்வாகிப்பதற்கான ஆசாரியத்துவத்தைத் தயாரித்தல்.

## லேவியராகமம்

அந்தவழிகாட்டுதல்கள் லேவியராகமம் புத்தகத்தில் அடுத்து தொடர்கிறது. லேவியாராகமத்தின் முதல் ஏழு அதிகாரங்கள் கூடாரத்தில் செலுத்தப்பட வேண்டிய



காணிக்கைகளை விவரிக்கின்றன. மூன்று வகையான பலிகள் இருந்தன. (1) ஒப்புரவை வழங்கும்சர்வாங்க தகன பலி (2) சமாதான பலிகள், ஒப்புரவாக்குதலினால், இஸ்ரயேலர்கள் தாங்கள் பெற்ற சமாதானத்திற்காக பாராட்டுகளை தெரிவிக்கும் தன்னார்வ பலிகள். (3). இஸ்ரயேலர்களின் வேண்டுமென்றே செய்யாத (தற்செயலான)பாவங்களை மறைப்பதற்கான பாவநிவாரண பலிகள். (அத்துமீறல் பலி என்பது பாவநிவாரண பலியின் ஒரு வடிவமாக இருந்தது, அதிக குற்றச் செயல்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், இன்னும் அதிகமான காணிக்கை செலுத்துபவர்கள் தேவைப்பட்டார்கள். ) இப்போது நமக்கும், மனுக்குலத்திற்கு இராஜ்யத்திலும் செலுத்தவேண்டும்.

ஒப்புரவாக்குதலின் பரிசை முதலில் பாராட்டுகிறோம். பிறகு நாம் தேவனுடைய சேவைக்கு நம்மை ஒப்புக்கொடுக்கிறோம். அதன்பிறகு, நாம் குறுகிய வழியில் இன்னும் பரிசுத்தமாக நடக்க முற்படும்போது. தற்செயலான பாவங்கள் எழும்போது அதிலிருந்து சுத்திகரிக்கப்படுகிறோம், மேலும் அதிக குற்றமுள்ள பாவங்களைத் திருத்துகிறோம்.

மனுக்குலம் இராஜ்யத்தில் பரிசுத்தமான பெரும் பாதையில் முன்னேறிச் செல்லும் போது இந்த செயல்முறை அவர்களுக்கு பொருந்தும்.

### ஆசாரியத்துவத்தின் பிரதிஷ்டை

இந்தப் பலிகளுக்கான விதிமுறைகள் லேவியராகமம் 7 -ன் முடிவில் காணப்படுகிறது. ஆனால் ஆசரிப்புக் கூடாரம் செயல்பட பலிகளை நிர்வகிக்க ஒரு ஆசாரியத்துவம் அவசியம். ஆசாரியத்துவத்தைத் தயாரிக்கும் செயல்முறை வேலியாராகமம் 8 ல் விவரிக்கப்பட்டுள்ளது. ஆரோன் பிரதான ஆசாரியராகவும், அவருடைய குமாரர்கள் ஆசாரியர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். ஆரோன் இயேசுவைஅடையாளப்படுத்துகிறார், அவர் தனது ஊழியத்தின் 3½ ஆண்டுகள், அவருடைய பரமேறுதலுக்குப் பிறகு மகிமையுடன் நம்முடைய பிரதான ஆசாரியராக ஆனார். அவரது குமாரர்கள், ஆசாரியர்களாக வளர்ந்தவர்கள். இவர்கள் சுவிசேஷ யுகத்தில் உருவாக்கப்படும் சபை வகுப்பைப் அடையாளப்படுத்துகிறார்கள். " இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து," அந்த ஆயிரவருடம் அவர்களை தேவனோடு ஒப்புரவாக்குவார்கள். (வெளிப்படுத்துதல் 20:6)

முதலாவது பாவநிவாரணபலிக்கு ஒரு காளை பலி செலுத்தப்பட்டது. (லேவியராகமம்8:2)இது இயேசுவின் 3½ வருட ஊழியத்தின் போது அவர் செய்த பலியைப் பிரதிபலக்கிறது, மேலும் அவரை நமது பிரதான ஆசாரியராக ஆயத்தப்படுத்துகிறது.காளையின் வாழ்க்கை இயேசுவின் வாழ்க்கையை அடையாளப்படுத்துகிறது, இவரை பின்பற்றுபவர்களுக்கு மீட்பை வழங்கப்படுகிறது. 6ம் வசனத்தில் ஆரோனும் அவருடைய குமாரர்களும் ஜலத்தினால் ஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.ஆரோன் நம்மைப் போலவே ஆபூரணராக இருந்தார், ஆனால் முதலில் தண்ணீரால் கழுவப்பட்டதால், பாவம் செய்யாத இயேசுவின் சிறந்த அடையாளமாக அவர் மாறினார். அவருடைய குமாரர்கள் கழுவப்படுதலை எபேசியர் 5:26 ம் வசனம் குறிக்கலாம். "தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்," (தீத்து 3:5)

ஆரோன் தனது ஊழியத்திற்கான அங்கிகளால் அலங்கரிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியைக் குறிக்கும் எண்ணெயால் அபிஷேகம் செய்யப்பட்டார். வசனம் 13 இல் ஆரோனின் குமாரர்களும் தங்கள் ஊழியத்திற்கான அங்கிகளால் அலங்கரிக்கப்பட்டனர்.வசனம் 14ல் பாவநிவாரண காளை அவர்களுக்கு முன்பாக நிறுத்தப்பட்டது.



ஆரோனும் அவருடைய குமாரர்கள் ஒவ்வொருவரும் "பாவநிவாரணபலிக்காக காளையின் தலையின்மேல் தங்கள் கைகளை வைத்தனர், "தங்கள் பாவங்களை காளை சுமக்கும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. இயேசுவுக்கு நிச்சயமாக பாவம் இல்லை, ஆனால் ஆரோன் இயேசுவை அடையாளப்படுத்துவதற்காக, அபூரணமான ஆரோனின் பாவங்கள் மூடப்பட்டது.

வசனம் 18 இல் சர்வாங்க தகன பலி கொடுக்கப்பட்டது. மீண்டும், ஆசாரியர்களின் கைகள் அதன் மீது வைக்கப்பட்டன, மேலும்19-20 வசனங்களில் அது பலியிடப்பட்டு நுகரப்பட்டது.

காளை இயேசுவின் 3½ வருட ஊழியத்தை அடையாளப்படுத்தினதால், ஒரு வேளை பின்தொடர்ந்த ஆட்டுக்கடா, இன்னும் குறிப்பாக, அவருடைய ஊழியத்தின் முடிவில் அவரது வாழ்க்கையின் இறுதி பலனாக இருக்கவேண்டும்.வசனம்22 மற்றும் அதன் பின் வரும் இரண்டாவது ஆட்டுக்கடா, "அர்ப்பணிப்பின் ஆட்டுக்கடாவாக" தோன்றுகிறது. இந்த மிருகங்களோடு தங்களின் அடையாளத்தை வெளிப்படுத்தஆசாரியர்களின் கைகள் அதன் மீது வைக்கப்பட்டது. அர்ப்பணத்தின் ஆட்டுக்கடா ஒரு சமாதான பலியாக இருந்தது. இது இயேசு மற்றும் சபையின் ஜீவ பலியை அடையாளப்படுத்தியது.

வசனம் 23 இல், இந்தப் பலியின் இரத்தத்தில் கொஞ்சம், ஆரோனின் வலது காது, வலது கட்டைவிரல் மற்றும் வலது பெருவிரல் ஆகியவற்றில் பூசப்பட்டது. இது அவருடைய அர்ப்பணிப்பையும் அவருக்குக் கீழ் பணியாற்றுபவர்களையும், கேட்கவும்,வேலை செய்யவும், கடவுளின் வழிகளில் நடக்கவும் அடையாளப்படுத்தும் என்று பரிந்துரைக்கிறது.

வசனம் 26 இல், "புளிப்பில்லா அப்பங்களின் கூடையிலுள்ள புளிப்பில்லா அதிரசத்தில் ஒன்றையும், எண்ணெயிட்ட அப்பமாகிய அதிரசத்தில் ஒன்றையும், ஒரு அடையையும் எடுத்து, அந்தக் கொழுப்பின்மேலும் முன்னந்தொடையின்மேலும் வைத்து..." இயேசுவும் திருச்சபையும் பாவமற்றவர்களாகவும், கடவுளின் ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்டவர்களாகவும், மகிமையின் பரலோக ஸ்தானத்தை எதிர்நோக்குவதையும் இவை அடையாளப்படுத்துகிறது.

இந்த மூன்று பொருட்களும், பலியின் கொழுப்பையும் (உற்சாகம்) மற்றும் வலது தோள்பட்டையும் (உற்சாகமான ஊழியத்தின் முயற்சி) மோசேயால் விடுவிக்கப்படும் வரை கடவுளுக்கு முன்பாக அசைக்கப்பட்டது - இங்கு இயேசுவையும் சபையையும் தங்கள் ஊழியம் முடிவடையும் வரை தங்கள் கடவுளுக்கு அர்ப்பணிப்பை அடையாளப்படுத்துகிறது.

இந்த பிரதிஷ்டை விழா ஏழு நாட்கள் தொடர்ந்ததாக வசனம் 33 கூறுகிறது. "பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறும்வரைக்கும், ஏழு நாள் ஆசரிப்புக் கூடாரவாசலை விட்டுப் புறப்படாதிருங்கள், ஏழுநாளளவும் நீங்கள் பிரதிஷ்டைப்படுத்தப்படுவீர்கள்." வெளிப்படையாக, இவை சுவிசேஷ யுகத்தின் ஏழு காலங்கள் அதாவது வெளிப்படுத்துதல் 2 மற்றும் 3 இன் ஏழு சபைகளை சித்தரிக்கின்றன.

**எசேக்கியேல் 44**

எசேக்கியேல் 40 -48 அதிகாரங்களில் ஒன்பது அதிகாரங்களில், ஆயிரமாண்டு இராஜ்யத்தின் தரிசனம் காண்பிக்கப்படுகிறது. இதோடு எசேக்கியேல் புத்தகம் முடிவடைகிறது. 44 அதிகாரம் இல், ஆசாரியத்துவத்தைப் பற்றி குறிப்பிடுகிறது. இது ஜெயங்கொள்ளும் திருச்சபை இராஜ்யத்தில் மனுக்குலத்திற்கு ஆசாரியர்களாகச் சேவை

செய்கிறதை சித்தரிக்கிறது."இஸ்ரயேல் புத்திரரே, என்னைவிட்டு வழிதப்பிப்போகையில், என் பரிசுத்த ஸ்தலத்தின் காவலைக் காக்கிற சாதோக்கின் புத்திரராகிய லேவியரென்னும் ஆசாரியர்களே எனக்கு ஆராதனைசெய்ய என் சமீபத்தில் சேர்ந்து, நிணத்தையும் இரத்தத்தையும் எனக்குச் செலுத்த என் சந்நிதியில் நிற்பார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."என்று 15ம் வசனம் கூறுகிறது. இவர்கள் தேவனுடைய வாசஸ்தலமாகிய, பரலோகத்தில் ஊழியம் செய்வார்கள்.

இதற்கு முன், எசேக்கியேல் *44:10, 11*இல் உண்மையாக இல்லாத லேவியர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர், அவர்கள் மீட்கப்பட்டு, ஆலயத்தில் சில துணை சேவைகளைப் பெறுவார்கள்."இஸ்ரயேல் வழிதப்பிப்போகையில், என்னைவிட்டுத் தூரமானவர்களும், என்னைவிட்டு வழிதப்பித் தங்கள் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றினவர்களுமாகிய லேவியரும் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள். ஆகிலும் அவர்கள் என் ஆலயத்தின் வாசல்களைக் காத்து, என் ஆலயத்தில் ஊழியஞ்செய்து, என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள், அவர்கள் ஜனங்களுக்காகத் தகனபலிகளையும் மற்றப் பலிகளையும் செலுத்தி, இவர்களுக்கு ஊழியஞ்செய்கிறதற்கு இவர்கள் முன்பாக என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள்." (வெளிப்படுத்தல் 7:15)

"வாசல்களின்" பொறுப்பைக் கொண்டிருப்பது ஒருவேளை வெளிப்படுத்துதல் 21:12, 27உடன் இணைக்கப்பட்டிருக்கலாம், அங்கு புதிய எருசலேமின் ஒவ்வொரு வாசலையும் தேவதூதர்கள் கண்காணித்து மனந்திரும்புபவர்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுவார்கள். இந்த லேவியர்கள் "என் வாசஸ்தலத்தில் ஊழியக்காரர்களாக"இருப்பார்கள். இவர்கள் பரலோக மகிமையில் இருப்பார்கள் என்று பரிந்துரைக் கப்படுகிறது.

இவ்வாறு, கிறிஸ்துவும் திருச்சபையும் இராஜ்யத்தில் மனுக்குலத்திற்கு ஆசாரியர்களாக ஊழியம் செய்வார்கள். அவர்களுடைய பரலோக மகிமையிலிருந்து, ஜனங்களை கடவுளுடன் சமரசம் செய்து, மனுக்குலத்திற்கு நித்திய ஆசீர்வாதங் களைக் கொண்டு வருவார்கள்.

## முன்னுதாரணத்தால் வழிநடத்தப்படுதல்

# ஆசாரியர்கள் நல்ல மற்றும் நேர்மையான உதாரணங்களாக இருக்க வேண்டும்



— Len Griehs

"நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13:15)

இயேசு தம்முடைய உயிரை அனைவருக்கும் மீட்கும் பொருளாகக் கொடுக்க வந்தார் (1தீமோத்தேயு 2:6)மேலும், அவருடைய மூன்றரை வருட ஊழியத்தின் போது, உண்மையுள்ள ஒருவர் எவ்வாறு யெகோவா தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்பதைக் காட்டினார். அவரது உதாரணம் நம் வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளக் கூடிய பலியாக மாற்றுவதற்கான ஒரு முன்மாதிரியை நமக்கு வழங்குகிறது. (ரோமர் 12:12) அதேபோல், இயேசுவைப் பின்பற்றுபவர்கள் மற்ற உண்மையான விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். (1தீமோத்தேயு 4:12)

பவுலின் அறிவுரைகள் - "இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்துபோகிறதில்லை. வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்." (2கொரிந்தியர் 4:1, 2)நம் வாழ்வின் அனைத்து அம்சங்களும் நமது முதன்மையான நோக்கத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும், அதுவே இப்போதும், என்றென்றும் அவருக்கு ஊழியம் செய்வதாகும். (2பேதுரு 3:14)

"கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான் ? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ணுவான் ? உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே. அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்குசெய்யாமலும், தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான். ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன், கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம் பண்ணுகிறான், ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான். தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை." (சங்கீதம் 15)

### பயிற்சியில் நல்ல மற்றும் நேர்மையான ஆசாரியருக்கான அறிவுரைகள்

(1) நம்பகத்தன்மை (**Authenticity**) "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." (ரோமர் 12:2)

உணர்ச்சியின் ஒரு தருணத்தில் பிசாசின் சூழ்ச்சிகளுக்கு இரையாகாமல் இருக்க நாம் எப்போதும் சுயக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். (1பேதுரு 5:8) பலர் பலவீனமான தருணத்தில் சோதனைக்கு ஆளாகிறார்கள் மற்றும் தங்கள் வாழ்நாள் முழுவதும் வருந்துகிறார்கள். தனிப்பட்ட சபதம் அல்லது பிற சுயமாக விதித்துள்ள வழிகாட்டுதலைப் பயன்படுத்தினால், உங்களை விட பரிசுத்தமான அணுகுமுறையைக் காட்டாமல் நாங்கள் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும். சில சமயங்களில் நம் அர்ப்பணிப்பிலிருந்து நம்மை திசைதிருப்பும் வாய்ப்புகளை நாம் கடந்து செல்ல வேண்டும் என்று இது அர்த்தப்படுத்தலாம். நாம் சில அவமதிப்பு அல்லது துன்புறுத்தலுக்கு ஆளானால், அது நீதிக்காக இருக்கட்டும். (2தீமோத்தேயு 3:12) அதே நேரத்தில், நமது உறுதிப்பாட்டை பகிர்ந்து கொள்ளாதவர்களை நாம் வெறுக்கக்கூடாது, ஆனால் நம் முன்னிலையில் அவர்களை அமைதியாகவும், நிதானமாகவும் உணரவைக்க வேண்டும். இயேசு பாவிகளுடன் பழகினார், ஆனால் அவர் வார்த்தைகளில் மட்டுமல்ல, செயல்களிலும், தூய்மையாக இருந்தார்.

திரு. வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு முறை இரண்டாம் உலகப் போரின் போது அதீத

துணிச்சலுக்காக கௌரவிக்கப்பட்ட விமானப் படை அதிகாரியை சந்தித்தார். அவர்கள் கைகுலுக்கியதும், "என் முன்னிலையில் நீங்கள் மிகவும் பணிவாகவும் சங்கடமாகவும் உணர வேண்டும். அப்படியானால், உன்னுடையதில் நான் எவ்வளவு தாழ்மையாகவும் பணிவாகவும் உணருகிறேன் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம்" என்று சர்ச்சில் சொல்லி அவரை ஆசுவாசப்படுத்தினார்.

**2. நிலைத்தண்மை** (Consistency)



"ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக." (1கொரிந்தியர் 15:58)நாம் ஒருபோதும் மனச்சோர்வுக்கு அடிபணியக்கூடாது. உழைப்பின் மீதான் உற்சாகம், நம்மை தோல்வியில் கைவிடாமல் காக்கும். தாமஸ் எடிசன் மின்சாரத்தைப் பரிசோதித்தபோது, 13 மாதங்களில் 99 தோல்விகளைக் கணக்கிட்டார், இறுதியாக ஒளி விளக்கின் வேலைச் செய்யும் மாதிரியை உருவாக்கினார். ரேடியத்தை கண்டுபிடிப்பதற்கு முன்பு பியர் Pierreமற்றும் மேரி கியூரி 457 தோல்விகளைக் கணக்கிட்டனர். பூமிக்குரிய வழிகளில் இந்த முயற்சிகள் ஒரு கவனத்தையும் பக்தியையும் வெளிப்படுத்தின, அவை கடவுளின் பணியையும் அவருடைய சித்தத்தையும் செய்வதற்கான நமது தேடலில் நாம் பின்பற்ற வேண்டும். உதாரணமாக, நம்முடைய சாட்சி முயற்சிகள் பலனளிக்காமல் போகும்போது, நாம் எளிதில் சோர்வடைந்து, கடவுளுடைய வார்த்தையைப் பரப்புவதற்கான முயற்சிகளைக் குறைக்கலாம். ஒருவேளை கடவுளுடைய சத்தியத்தை பயனுள்ள விவாதத்தில், நூறு முயற்சிகளில் ஒன்று மட்டுமே பயனுள்ளதாக இருக்கலாம். ஆயினும் கூட, இந்த யுகத்தின் முடிவில், தனிப்பட்ட சாட்சியங்கள் வெகுஜன ஊடக முயற்சிகள் மூலம் சத்தியத்தில் வருவதைக் காட்டிலும் ஒருவரிடம் ஒருவர் விவாதிப்பதன் மூலம் சத்தியம் அதிகமாக வெளிப்படுகிறது. எனவே ஒரு போதும் இந்த வழி முறையை விட்டுவிடாதீர்கள்!

**3. நேர்மை**(Integrity)

"சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும், அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது, அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்." (தீத்து 1:15)"ஒருமைப்பாடு அல்லது நேர்மை""integrity" என்ற வார்த்தை integer என்ற லத்தீன் வார்த்தையில் இருந்து வந்தது. இதற்கு "முழு" அல்லது "தீண்டப்படாதது" என்று பொருள். கணிதத்தில், integer என்பது ஒரு முழு எண். ஒரு நேர்மையான நபர் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் முற்றிலும் நேர்மையானவர், மேலும் அவர்களின் வலுவான தார்மீகக் கொள்கைகளை ஒருபோதும் சமரசம் செய்ய மாட்டார். அவர்கள் எப்போதும் சரியானதைச் செய்ய முற்படுகிறார்கள், மூடிய கதவுகளுக்குப் பின்னால் கூட நெறிமுறையுடன் நடந்துகொள்கிறார்கள். நாம் நம் சகோதரர்களோடு இருந்தாலும் சரி, உலக சிநேகிதர்களோடு இருந்தாலும் சரி அல்லது தனியாக இருந்தாலும் சரி கடவுள் எப்போதும் நம் வாழ்வில் இருக்கிறார். நம் விழுந்துபோன மாம்சத்தில் நாம் ஒருபோதும் பூரணத்தை அடைய முடியாது. என்றாலும், நம் நடத்தைக்கான தரம் யாருக்கும் தெரியாமல் இருந்தாலும் கூட, நாம் ஒருபோதும் சமரசம் செய்யக்கூடாது. வாக்குறுதிகள் காப்பாற்றப்பட வேண்டும், நேர்மை முன்னணியில் இருக்க வேண்டும். கூடுதலாக, நாம் செய்த தவறுகளைத் திருத்துவதற்கு நேர்மையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் மற்றும் நாம் புண்படுத்தியவர்களிடம் மனப்பூர்வமான மன்னிப்பு கேட்க வேண்டும்.

பாபி ஜோன்ஸ், ஒரு வேளை உலகின் சிறந்த அமெச்சூர் கோல்ப் வீரர், அமெச்சூர்கள் பொதுவாக கடுமையான விதிகளை புறக்கணிக்கும் ஒரு

விளையாட்டில் அவரது நேர்மைக்காக அறியப்பட்டார்.1925இல் நடந்த யு. எஸ். ஓபன் போட்டியில், தற்செயலாக புல்லை வெட்டியதன் மூலம் விதி 18 (பந்தை நகர்த்துதல்) மீறியதாக அவர் வலியுறுத்தினார். விதிகள் குழு ஒப்புக்கொள்ளவில்லை, ஆனால் இறுதியாக, அவர் தன்னை மதிப்பீடு செய்த ஒரு ஸ்ட்ரோக் பெனால்டியை ஏற்றுக்கொண்டது. அதே வித்தியாசத்தில் ஒரு ஸ்ட்ரோக்கில் ஒருவர் ஆட்டம் இழந்தார். விளையாட்டு எழுத்தாளர்கள் அவரது நேர்மையைப் பாராட்டியபோது, "வங்கிகளைக் கொள்ளையடிக்காததற்காக நீங்கள் என்னைப் பாராட்டலாம்" என்று அவர் பதிலளித்தார், விதிகளின்படி வாழ்வது எல்லா உண்மையான கிறிஸ்தவர்களுக்கும் தனிப்பட்ட அர்ப்பணிப்பாக இருக்க வேண்டும்.

**4. இரக்கம்**

"ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (கொலோசேயர் 3:12,13)

செயல்களும் முடிவுகளும் எப்போதும் கருணையுடன் இருக்க வேண்டும். இன்றைய உலகில், சமூக ஊடகங்கள் எங்கும் பரவுவது தீமை மற்றும் துன்பம் பற்றிய நமது பார்வையை மாற்றும். மனித துன்பங்களிலிருந்து நாம் எளிதில் பிரிந்து விடலாம். "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்,



அவர்கள் இரக்கம் பெறுவார்கள்." என்று இயேசு கூறினார். (மத்தேயு5:7)இரக்கம் என்பது தவறுகளுக்கு நாம் எப்போதும் தண்டனையைத் தேடுவதில்லை என்று பொருள், அல்லது மன்னிப்புக்கு தகுதியற்ற ஒருவரை விரைவாக மன்னிக்கிறோம் என்பதாகும். கொலோசேயரில் பவுல் விவரிப்பது போல, இது மேன்மை, கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை அல்லது கருணை ஆகியவற்றைக் குறிக்கலாம். சபை அல்லது குடும்பத்தில் ஒரு மூப்பராகவோ அல்லது மூத்த உறுப்பினராகவோ யாரோ ஒருவர் மீது நமக்கு அதிகாரம் இருக்கும்போது இது குறிப்பாக உண்மையாக இருக்கவேண்டும். நல்ல சமாரியனைப் போலவே, நாம் ஒரு எதிரியை மன்னிக்க வேண்டும் அல்லது உதவ வேண்டும்.

1943 ஆம் ஆண்டில், ஜெர்மன் போராளிகள் லெப்டினன்ட் சார்லி பிரவுனின் Charlie BrownB17 விமானத்தை கடுமையாக சேதப்படுத்தினர், மேலும் அவரது திசைகாட்டி அவரை எதிரி பிரதேசத்திற்கு அழைத்துச் சென்றது. பிரான்ஸ் ஸ்டிக்லர் Franz Stigler என்ற ஜெர்மன் விமானிக்கு விமானத்தை சுட்டு வீழ்த்த உத்தரவிடப்பட்டது. அவர் பிரவுனின் விமானத்தை நோக்கி துப்பாக்கிகளுடன் சென்றபோது, சேதமடைந்த விமானத்தை கையாள பிரவுன் தீவிரமாக முயற்சிப்பதைக் கண்டார். அவர் கருணை மற்றும் இரக்கத்தைக் காட்டினார், பிரவுனுக்கு வணக்கம் செலுத்தினார், மேலும் பாதுகாப்பான ஆளில்லாத பகுதிக்கு அவரை வழிநடத்தினார். ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, பிரவுனும் ஸ்டிக்லரும் சந்தித்தனர், மரிக்கும் வரை நண்பர்களாக இருந்தனர்.

**5. கனிவு (Kindness.)**

"ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (எபேசியர் 4:32)

கோதுமை மற்றும் களைகளின் உவமை அப்போஸ்தலர்கள் இறந்த பிறகு மாற்றங்கள் ஏற்படும் என்று எச்சரித்தது. (மத்தேயு13:25-43)படிநிலையும் சம்பிரதாயமும் வளர்ந்தன. கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் தேவாலயத் தலைவர்களால் தங்களுடைய ஆதாயத்திற்கு பயன்படுத்தப்பட்டனர். மேலும், அவர்களிடம் கட்டாயமாக வசூலிக்கப்பட்டது. சபை தலைமை ஒரு அரசியல் அலுவலகமாக

மாறியது. வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் ஜனங்களிடமிருந்து ஒதுக்கிவைத்ததற்காக இயேசு கண்டனம் செய்தார். (லூக்கா 18:11)அவர்கள் இயேசுவைக் கண்டனம் செய்தார்கள் மற்றும் அவரை வரி வசூலிப்பவர்கள் மற்றும் பாவிகளின் நண்பர் என்று அழைத்தனர், ஏனெனில் அவர் யாரையும் அவர்களின் அந்தஸ்தின் அடிப்படையில் திருப்ப மறுத்தார். (மத்தேயு11:19)

இஸ்ரயேலின் ஞானிகள் ரூத்தின் புத்தகத்தை "கருணையின் சுருள்" என்று குறிப்பிடுகின்றனர். ரூத் ஒரு புறஜாதியாக இருந்தாள், அவள் விதவையான நகோமியிடம் கருணை காட்டுவதன் காரணமாக தாவீதின் (பின்னர் இயேசு) வம்சத்தின் ஒரு பகுதியாக மாறினாள். அந்நிய தேசத்தில் அந்நியராக இருந்தபோதிலும் (ரூத் 2:10), அவள் நகோமியைப் பற்றிக்கொண்டாள், அதன்பின் போவாஸை மணந்து வெகுமதியைப் பெற்றாள்.இன்று நம் நாட்டில் பல வெளிநாட்டவர்கள் உள்ளனர், மற்றவர்களிடம் இருக்கும் அதே கருணையுடன் அவர்களை நடத்துகிறோமா ? மத்தேயு11:28ல் "நான் சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவன்" என்று இயேசு தன்னைப் பற்றி விவரித்தார். நம் உலகம் பெரும்பாலும் அவசரமாகவும், தனி நபர்களை சுட்டி காட்டாத ஒரு சூழ்நிலையிலும் காணப்படுகிறது. ஆனால் ஒரு கணம் எடுத்துக்கொண்டு சீரற்ற கருணைச் செயலைச் செய்வது, இரக்கமுள்ள சமூகத்தை வளர்க்க உதவும். ஒரு நல்ல மனிதனின் வாழ்க்கையின் சிறந்த பகுதி, அவரது சிறிய, பெயரிடப்படாத, நினைவில் கொள்ளப்படாத கருணை மற்றும் அன்பின் செயல்கள்."என்று ஆங்கில கவிஞர் வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் William Wordsworth எழுதினார்.

### 6. பணிவு Humility.



"ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்."(பிலிப்பியர் 2:3)சமூகத்தில் அல்லது அரசியல் அரங்கில் நல்ல பெயரைப் பெறுவதற்காக பலர் நன்கொடையாளர்களாகவோ அல்லது தொழிலாளர்களாகவோ மாறுகிறார்கள். நாம் எந்த ஒரு பணியையும் நம்முடைய புகழ்ச்சிக்காகவோ அல்ல தேவனுக்காக செய்யவேண்டும் என்று பவுல் அறிவுறுத்துகிறார். எந்த ஒரு கிறிஸ்தவனும் சேவையின் அடிப்படையில் மற்றவர்களை விட தங்களை மேன்மையாக தங்களை எண்ணிக் கொள்ளக் கூடாது. (1கொரிந்தியர் 10:31)பரலோகத்தில் தம்முடைய ஸ்தானத்தை விட்டுக்கொடுக்கும் போது மனிதனின் மீட்பராக ஆவதற்குத் தயாராக இருந்ததில் இயேசு காட்டிய மனத்தாழ்மையின் மகத்தான உதாரணத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். கடவுள் அவருக்கு இன்னும் மேலான வெகுமதியைக் கொடுத்தாலும், அவர் செய்ய நினைத்த பணியை நிறைவேற்றுவதும், அவரது தந்தையுடன் அவருக்கு முந்தைய தொடர்பை மீண்டும் பெறுவது மட்டுமே அவருடைய ஒரே கவனம் இருந்திருக்க வேண்டும். (யோவான் 17:5)

மறுபதிப்பு 2060 இல், பாஸ்டர் ரசல் எழுதுகிறார் - "கடவுளின் குழந்தைக்கு சுய அகந்தையை விட ஆபத்தானது வேறு எதுவுமில்லை, நம்முடைய மற்றும் மற்றவர்களின் இருதயத்தின் உண்மையான முன்னேற்றம் மற்றும் சீர்திருத்தத்திற்கான வழியைத் தடுக்கிறது, மேலும் உண்மையான பயன்களையும் தடுக்கிறது, குறிப்பாக கடவுளுடைய சேவையில் பயனுள்ளதாக இருக்கும்.சில சமயங்களில் கடவுளிடம் இருந்து பெற்ற சத்தியத்தை அறிவிக்கும் போது, ஏதோ அவர்களின் சொந்த சாதனையாக இருப்பதைப் போல பேசுவதைக் கண்டு வருந்துகிறோம். தெய்வீகத் திட்டத்தைக் கண்டுபிடித்தவர்கள் என்ற வகையில் அவர்களுக்கு சில மரியாதைகள் இருக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள் போலிருக்கிறது. " நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒவ்வொரு செயலும் மனத்தாழ்மையுடன் செய்யப்பட வேண்டும்."

### 7. கிடைக்கும் நன்மை Availability

"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்

ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு." (2தீமோத்தேயு 4:2) சாட்சி கொடுப்பதற்கான ஆவல் சில சமயங்களில் நம்மை சத்தியத்தின் மோசமான காரியநிர்வாகிகளாக்கி விடும். எனவே, "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக - நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (யோவான் 6:26) இயேசு அந்தக் கூட்டத்தை விட்டுச் சென்றார், ஏனென்றால் அவர்கள் அவருடைய செய்தியைக் கேட்க விரும்பாமல், உணவு உண்ண விரும்பினார்கள். எனவே விவாதத்திற்காக அல்ல நேர்மையான விசாரணைகளில் ஈடுபடுமாறு பேதுரு அறிவுறுத்துகிறார்."உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்."(1பேதுரு3:15)

பயிற்சியில் இருக்கும் ஒரு ஆசாரியருக்கு வேதப்பூர்வக் கொள்கைகளைத் தவிர,உதவி, ஆறுதல் அல்லது ஆலோசனை வழங்குவது, மன மற்றும் உடல் ஆரோக்கிய நன்மைகளையும் கொண்டுள்ளது. ஒரு சீன பழமொழி இவ்வாறு மொழிபெயர்க்கப்படுகிறது - "உங்களுக்கு ஒரு மணிநேரம் மகிழ்ச்சி வேண்டுமானால், சிறிது நேரம் தூங்குங்கள். உங்களுக்கு ஒரு நாள் மகிழ்ச்சி தேவை என்றால் மீன் பிடிக்க செல்லுங்கள். நீங்கள் ஒரு வருடத்திற்கு மகிழ்ச்சியை விரும்பினால், ஒரு அதிர்ஷ்டத்தை சுதந்தரியுங்கள். நீங்கள் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியை விரும்பினால், யாருக்காவது உதவுங்கள்." நம்முடைய சொந்த தேவைகளை விட மற்றவர்களின் தேவைகளை முன்வைப்பது உறவுகளை பலப்படுத்துகிறது. இது நாம் சேவை செய்பவர்களுடன் நம்மை இணைக்கிறது. அடுத்த யுகத்தில், மற்றவர்களுக்கு உதவுவது நித்திய விதியை தீர்மானிப்பதில் ஒரு முக்கிய கொள்கையாக இருக்கும்.(மத்தேயு10:42)

## தீமோத்தேயுவுக்கு பவுலின் கடைசி ஆலோசனை

"நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு, இவைகளிலே நிலைத்திரு. உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய். " (1தீமோத்தேயு 4:13-16)இதுவரை வழங்கப்பட்டுள்ள மிகப் பெரிய பணிகளில் ஒன்றிற்காக பயிற்சியில் இருக்கும் நாம், இதுவரை யெகோவா தேவனுடன் இணக்கமாக வாழ்ந்த அனைவரையும் கொண்டு வந்து, ஊழித்தினாலும், அர்ப்பணிப்பினாலும் நம்முடைய ஆவிக்குரிய சரீரத்தை உருவாக்குவோம். ஆசாரியர்களாக பயிற்சி எடுக்கக்கூடிய நமது குணங்களை மேம் படுத்துவதற்கான வாய்ப்புகளை தினமும் தேடுவோம்.

## ஆசீர்வாதங்களை கற்பித்தல் சாபம் அல்ல

# நல்லதைக் கற்பிக்க ஆசாரியர்கள்



"பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டில்லாததற்கும், வித்தியாசம் பண்ணும்படிக்கும், கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரயேல் புத்திரருக்குச் சொன்ன சகல பிரமாணங்களையும் அவர்களுக்குப் போதிக்கும்படிக்கும், இது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும் என்றார்." ஆசாரியத்துவத்திற்கு (பிரதான ஆசாரியனாகிய ஆரோன் மற்றும் அவரது குமாரர்கள்) கட்டளையிடப்பட்டது. (லேவியராகமம் 10:10-11)

ஆசாரியர்களும் மற்றவர்களும் யெகோவா தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தை வைத்திருந்தார்கள். "இவர்கள் யூதாவிலே உபதேசித்து, கர்த்தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக்கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்த ஜனங்களுக்குப் போதித்தார்கள்." (2நாளாகமம் 17:8-9)கிறிஸ்துவின் உண்மையான ஆசாரியத்துவம் அவருடைய இராஜ்யத்தில் இருக்கும் என்பதை எசேக்கியேலின் ஆலயம் நமக்குக் காட்டுகிறது.

"அவர்கள் பரிசுத்தமானதற்கும் பரிசுத்தமல்லாததற்கும், தீட்டானதற்கும் தீட்டல்லாததற்கும் இருக்கும் வித்தியாசத்தை என் ஜனத்துக்குப் போதித்து, அவர்களுக்குத் தெரியப்பண்ணக்கடவர்கள். வழக்கிருந்தால் அவர்கள் நியாயந்தீர்க்க ஆயத்தமாயிருந்து, என் நியாயங்களின்படி அதைத் தீர்த்து, என்னுடைய பண்டிகைகளில் எல்லாம் என் நியாயப்பிரமாணத்தையும் என் கட்டளைகளையும் கைக் கொண்டு, என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்கக்கடவர்கள். " (எசேக்கியேல் 44:23-24, மத்தேயு 19:28)

இராஜ்யத்தின் ஜனங்களுக்கு கற்பிக்க நாம் ஒவ்வொருவரும் தயாராக இருக்க வேண்டுமானால், இன்று சொல்லிலும் செயலிலும் அதைச் செய்ய நாம் கற்றுக்கொள்ள வேண்டும். "நான் ஒரு பிரசங்கத்தை கேட்பதை விட அதை பார்க்க விரும்புகிறேன்." (Edgar A. Guest)

**ஒரு சம்பாஷனை**

கிறிஸ்துவின் இராஜ்யத்தில் நாம்



அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமானால், முதலில் நம் எதிரிகளை நேசிக்க கற்றுக்கொள்ள வேண்டும் (மத்தேயு 5:44). கிறிஸ்து "அனைவருக்காகவும் ஒருமுறை" மரித்தார் என்றால், அதில் நம் எதிரிகளும் கூட அடங்குவார்கள். எங்கள் கால்வினிஸ்ட் நண்பர் ஒருவருடன் நடந்த ஒரு விவாதத்தைக் கவனியுங்கள்.

A. இயேசு "ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிப்பார்த்தார்." (எபிரெயர் 2:9) B ஆம்...

நம்பும் அனைவருக்காகவும் அவர் ஜீவனை கொடுத்தார்.

A."ஆதாமில் எல்லாரும் மரிப்பதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் " (1கொரிந்தியர் 15:22 ) B. விசுவாசிக்கிற அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவார்கள்.

A. விசுவாசிகள் மட்டும் ஆதாமில் மரிக்கிறார்களா? (உரையாடல் இங்கே முடிந்தது, ஆனால் அவர்கள் நல்ல நண்பர்களாக இருந்தனர்)

நம்முடைய யெகோவாவின் சாட்சி நண்பர்கள் அவர்களுடைய பைபிள் (புதிய உலக மொழிபெயர்ப்பு) சொல்வதைக் காட்டலாம்."ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று." (ரோமர் 5:18 NWT) ஆயினும் கூட, அவர்களின் Kingdom Interlinear diaglott இன்டர்லீனியர் டயகிலாட், கிரேக்க மற்றும் ஆங்கில இன்டர்லீனியர் "எல்லா வகையான மனிதர்கள்" என்பதற்குப் பதிலாக "எல்லா மனிதர்கள்" என்று கூறுவதைக் காட்டுகிறது என்பதை ஒருவர் சுட்டிக்காட்டலாம். இது 1தீமோத்தேயு2:4இல் உள்ள "எல்லா வகையான ஆண்களுக்கும் /ஜனங்களுக்கும் " பொருந்தும், இங்கு KIஇன்டர்லீனியர் "எல்லா ஆண்களும்" என்று மட்டுமே கூறுகிறது."

ஒரு நியாயமான கேள்வி - இயேசு கிறிஸ்து "அனைவருக்காகவும் ஒரு முறை" மரித்திருந்தால், ஏன் அனைவரும் பயனடைய வில்லை?

**வரலாற்றில் ஒரு படி முன்னோக்கி**

தற்செயலாக வரலாற்றில் ஒரு படி முன்னோக்கி இருந்தாலும், பிரெஞ்ச் புரட்சியானது (1789 - 1799), அமெரிக்காவில் "கிறிஸ்தவ தொடர்பு"Christian Connexion பைபிளைப் படிக்க தனிநபர்களை ஊக்குவித்தது. அரசியல் மற்றும் சமூக எழுச்சியின் போது ஜனங்கள் அர்த்தத்தையும் ஸ்திரத்தன்மையையும் நாட்டியதால், இது வேதாகமத்தின் தனிப்பட்ட நம்பிக்கையில் புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தைத் தூண்டியது. {ஸ்மித்தின் பைபிள் அகராதியின்படி, ஆசாரியர் என்ற ஆங்கில வார்த்தை கிரேக்க ப்ரெஸ்பைட்டரிலிருந்து பெறப்பட்டது. இது "மூத்தவர்" (ஹீப்ரு கோஹன்) என்பதைக் குறிக்கிறது.}

"கிறிஸ்தவர் என்ற பெயர் மட்டுமே நாம் எடுக்கும் வேறுபாட்டின் ஒரே பெயர், மற்றும் ஒரு பிரிவாக, நாம் அறியப்பட விரும்புகிறோம், மேலும் பைபிள் மட்டுமே நம்பிக்கை மற்றும் நடைமுறையின் எங்கள் விதி." {மெக்ளின்டாக் மற்றும் ஸ்டராங்கின் சைக்ளோபீடியா.}

அவர்கள், "கிறிஸ்தவ குணத்தை ஐக்கியத்தின் ஒரே சோதனையாகவும், அவர்களின் மதத்தை "எளிமையான மொழி மற்றும் சராசரி தீர்ப்பின்படி பைபிளைப் புரிந்துகொள்வது" என்றும் வலியுறுத்தினார்கள். 3(Herald of Christ's Kingdom 104, 1, 2022 Jan./Feb.).

## வெவ்வேறு நேரங்களில் சில சத்தியங்கள் மிக முக்கியமானவை



### சத்தியங்கள் செயல்படுத்தப்படும் போது அவை மிக முக்கியமானவை

சுவிசேஷ யுகம் ஏழு காலங்களாகப் பிரிக்கப்பட்டது போல (எடு. கா. யோசுவா 6, வெளிப்படுத்துதல் 2-3)அந்த காலக்கட்டத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப வித்தியாசமாக ஏதாவது செய்ய சபை தூண்டப்பட்டிருக்கலாம்.

ஆரம்பகால சபையில், அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் தாங்கள் இனி மோசேயின் சட்டத்தின் கீழ் இல்லை என்பதையும், இப்போது இயேசு கிறிஸ்துவின் கீழ் இருப்பதையும் அங்கீகரிக்க வேண்டும். (கலாத்தியர் 3:24, 4:4-5) பிற்பட்ட நூற்றாண்டுகளில், - அந்தச் சட்டத்தின் கீழ் ஒருபோதும் இல்லாத புறஜாதிகள் வந்தபோது, அதாவது பெரும்பான்மையாக மாறியபோது, பிரமாணத்தில் பிரச்சினைகள் வந்தது.

பேகன் ரோமானியப் பேரரசு முழுவதும் கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப்பட்டதும், சிலைகளுக்குப் பலியிடப்பட்ட பொருட்களை சாப்பிடலாமா என்பது ஒரு பிரச்சினையாக மாறியது.(1கொரிந்தியர் 10:25-29) நவீன காலங்களிலும், பல நாடுகளிலும், மளிகைக் கடைகளில் விற்கப்படும் சிலைகளுக்கு இறைச்சியைப் பலியிடுவதை நாம் பார்த்ததில்லை.

அந்தி கிறிஸ்து வருவார் என்று பல தீர்க்கதரிசன எச்சரிக்கைகள் இருந்தன. எடுத்துக்காட்டு - தானியேல் 7:24,25 , 2தெசலோனிக்கேயர் 2:3-9, 1யோவான் 2:18-22 , வெளிப்படுத்துதல் 13:1-8, 17:3)அந்திகிறிஸ்து வருவதையும், அதன் ஆவி ஏற்கனவே சபையை ஆக்கிரமித்துள்ளது என்பதையும் ஆரம்ப நூற்றாண்டுகளில் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு முக்கியமாக இருந்தது. இன்று அந்திக்கிறிஸ்து நியாயந்தீர்க்கப்படுவதைப் பார்ப்பது முக்கியம். ஆனாலும், அந்திக்கிறிஸ்து அமைப்பின் கீழ் வாழ்பவர்கள் அதன் தீமையை அங்கீகரிப்பது மிக முக்கியமானதாக இருந்தது.

பலருக்கு, மதத் துன்புறுத்தலில் இருந்து சீர்திருத்தம் ஓரளவு நிவாரணம் அளித்தது. இருப்பினும், எல்லா சீர்திருத்தவாதிகளும் நல்லவர்கள் அல்ல என்பதை உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் அங்கீகரிப்பது அவசியமாக இருந்தது. அவர்களுடைய செயல்கள் கடவுளுக்கு முன்பாக அவர்களை முழுமைப்படுத்தவில்லை, மேலும் சிலர் மட்டுமே கிறிஸ்துவின் நீதியில் தங்கள் ஆடைகளைத் தீட்டுப்படுத்தாமல் காத்துகொண்டனர்.(வெளிப்படுத்தல் 3:2-4) இன்று

நமக்கு இது ஒரு நல்ல பாடமாக இருந்தாலும், சீர்திருத்தத்தின் போது இந்த உண்மையைப் புரிந்து கொள்வது பார்ப்பவர்களுக்கு மிகவும் முக்கியமானது.

*1798-1799* இல் முடிவடைவதற்கு முன்பு 1260 நாட்கள் /வருடங்களின் தீர்க்கதரிசனங்கள் அதற்கு பிறகு இருந்ததைவிட குறைவான முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. இதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் எதிர்காலத்தில் கிறிஸ்துவின் வருகையையும், அதன் விளைவாக யூதர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்புவதையும் தேடத் தொடங்கினர். (அல்பரி தீர்க்கதரிசன மாநாடுகளின் Albury Prophetic Conferencesபின்னணியுடன், ஜோசப் வோல்ஃப் இந்த யுகத்திற்கு வரும் அட்வென்டிஸ்ட் செய்தியை நான்கு கண்டங்களுக்கு எடுத்துச் சென்றார்.)மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்க அட்வென்டிஸ்டுகள் மத்தியில், பரலோக அழைப்புக்கான கதவு 1844 இல் மூடப்படும் என்ற கருத்து இருந்தது.1843 அல்லது 1844 இல் கிறிஸ்து திரும்பி வரவில்லை என்பது தெளிவாகத் தெரிந்த பின்னரும் இந்த பார்வை பராமரிக்கப்பட்டது. மேலும் அது விரைவில் அட்வென்டிஸ்ட் இயக்கத்தை பிளவுபடுத்தியது. 3 ஆறாவது, "பிலதெல்பியா" காலம் ஏற்கனவே "கதவு அடைக்கப்படும்" என்ற சர்ச்சையை முன்னறிவித்தது. (வெளிப்படுத்துதல் 3:7,8)ஆகவே, புத்திசாலிகள் கதவு திறந்தே இருந்தது என்று தொடர்ந்து கற்பித்து பொது சாட்சி அளித்தது.

சுவிசேஷ யுகத்தின் ஏழாவது மற்றும் கடைசி காலத்திற்கு "இதோ நான் சீக்கிரமாக வருகிறேன்"என்பது இல்லை. "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்" என்று இயேசு கூறினார்.(வெளிப்படுத்துதல் 3:20) கிறிஸ்தவர்கள் முதலில் பாபிலோன் என்பதற்கான பொருளை உணர்ந்துகொள்ளவேண்டும். அதற்கு பின் "என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்."(ஏசாயா 48:20, வெளிப்படுத்துதல் 18:1-5)ஒரு முறை வெளியே வந்தால் போதாது. லோத்து சோதோமிலிருந்து அழைக்கப்பட்டு ஒரு சிறிய நகரத்திற்கு சென்றார். ஆனால் விரைவில் அதையும் விட்டு வெளியேற வேண்டியருந்தது. (ஆதியாகமம் 19:15-22,30 )எலியா மூன்று முறை ஒரு நகரத்தை விட்டு வெளியேற அழைக்கப்பட்டார். (2 இராஜாக்கள் 2:1-6)

பாடம் தெளிவாக உள்ளது - நாம் "பாபிலோனை" விட்டு வெளியேற வேண்டும், அதன் பாவங்களை நம்முடன் எடுத்துச் செல்லக்கூடாது. (எரேமியா 50-51)

கிறிஸ்தவர் வாழும் காலத்தில் செயல்பட பல தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நாம் விழிப்புடன் இருக்கிறோமா என்று மற்றவர்கள் கவனிக்கிறார்கள். நாம் கற்பிக்கவும் வேண்டும், பயிற்சி செய்யவும் வேண்டும். கிறிஸ்தவர்கள் எவ்வாறு கிறிஸ்தவ குணத்தை வளர்த்துக் கொண்டார்கள்

என்பதையும், தீர்க்கதரிசனங்களின்படி அவர்கள் எவ்வாறு செயல்பட்டார்கள் என்பதையும் உலகம் குறிப்பாக நினைவில் கொள்ளும்.

**சுவிசேஷம் கற்பித்தல்**

எப்பொழுதும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். தேவைப்படும்போது வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை நாம் தன்னலமின்றி கற்பிக்க வேண்டும், ஏனென்றால் மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.பொல்லாத அரசனாகிய ஆகாஸின் காலத்தில், ஆசாரியர்கள் கூலிக்குக் கற்பித்தார்கள், தீர்க்கதரிசிகள் பணத்திற்காகக் கணித்தார்கள். (மீகா3:11) இவைகள் "கொடூரமான உதாரணத்தை" நமக்குத் தருகிறது. இதற்கு பதிலாக, கடவுளின் மந்தையை விருப்பத்துடன் மேய்க்க வேண்டும் என்று பேதுரு சொல்கிறார், "இழிவான ஆதாயத்திற்காக அல்ல " (1பேதுரு5:2-3 ) "இலவசமாக பெற்றோம், இலவசமாக கொடுங்கள்" (மத்தேயு10:8)

**கிறிஸ்தவ நம்பிக்கையின் அடித்தளம்**

கிறிஸ்தவ நம்பிக்கை மற்றும் போதனைக்கான நியாயமான அடித்தளத்தை சுருக்கமாகக் கூறலாம் - எல்லா மனிதர்களும் - ஆதாமின் குழந்தைகள் அனைவரும் - பாவிகள். மீட்பரின் பலி இல்லாமல் யாரும் கடவுளுடன் சமரசம் செய்ய முடியாது. இயேசு அந்த பலியாக உலகிற்கு வந்தார், பின்னர் அந்த மீட்கும் பலியை உலகின் பாவங்களுக்காக பயன்படுத்துவார். மீட்பரின் வார்த்தையின் மேலுள்ள விசுவாசத்தின்



அடிப்படையில், விசுவாசி கர்த்தருடைய அழைப்பை ஏற்று, தெய்வீக ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்துக்கொள்ளலாம். விசுவாசமான சபை முடியும் வரை அந்த அழைப்பு திறந்திருக்கும். இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்பவர்கள் இந்த வார்த்தையின் உயர்ந்த அர்த்தத்தில் சகோதரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(அதிகம் அல்லது குறைவான முக்கியத்துவம் வாய்ந்த கோட்பாடுகளில் இருந்து சுருக்கப்பட்டது. Watch Tower 1913 August 1, page 232, R5284).

1யோவானில் உள்ள மூன்று வசனங்களில் சுருக்கமாக சொல்லப்பட்ட இயேசுவைப் பற்றி நாம் நம்ப வேண்டும்.

● "இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து."(1யோவான் 2:22)

● "தேவ ஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால் - மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது." (1யோவான் 4:2, அதேபோல 2 யோவான் 7).

● "இயேசுவானவர் தேவனுடைய

குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்." (1யோவான் 4:15)

அப்போஸ்தலன் யோவான் ஹோமௌசியாஸ், டிரினிட்டி, ட்ரையூன், முறைகள் (homoousias, Trinity, Triune, modes,)போன்ற இறையியல் சொற்களைப் பயன்படுத்தவில்லை. லூதர் எழுதினதை மேற்கொள் காட்டுகிறார், "ஆரியர்கள் நம்பிக்கை (லூதரின் கருத்து) தொடர்பாக தவறான கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், அவர்கள் இதில் மிகவும் சரியாக இருந்தனர் விசுவாசத்தின் விதிகளுக்குள் எந்த அவதூறான மற்றும் புதுமையான வார்த்தைகளை அறிமுகப்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று அவர்கள் கோரினர்.

திரித்துவம் என்ற வார்த்தை பைபிளில் இல்லை. புகழ்பெற்ற கால்வின் இதை ஒப்புக்கொள்கிறார், அவர் திரித்துவத்தை "ஒரு போப்பிஷ் கடவுள், அல்லது சிலை, வெறும் மனித கண்டுபிடிப்பு, காட்டுமிராண்டித்தனமான, முட்டாள்தனமான மற்றும் அவதூறான வார்த்தை" என்று அழைக்கிறார், மேலும் அவர் -ஓ புனிதமான, மகிமையான மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட திரித்துவம், முதலியான பிரார்த்தனைகளை அவர் முற்றிலுமாகக் கண்டிக்கிறார். "தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்களுக்குத் தெரியாது, மேலும் கடவுளின் பரிசுத்த வார்த்தையின் எந்த சாட்சியத்தையும் அடிப்படையாகக் கொண்டதல்ல."

நாமும், வேதாகமத்தில் உள்ள வார்த்தைகளுக்கு ஏற்றவாறு தேவையான வார்த்தைகளை பயன்படுத்தவேண்டும். பைபளின் வார்த்தைகளுக்கு மட்டுப்படுத்த வேண்டும்.

## அன்பான கடவுளின் இறுதித் தயாரிப்பு

கீழ்ப்படியாவிட்டால் என்ன நடக்கும் என்று அவர்கள் பயப்படுவதால் வரும் கீழ்ப்படிதல் அல்ல மாறாக, விரும்பி தேவனுக்கு கீழ்ப்படியக்கூடிய ஒரு சிருஷ்டிப்பே அன்பான கடவுளின் இறுதித் தயாரிப்பு. "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." (2தீமோத்தேயு1:7)

ஆறாவது படைப்பின் நாளின் பிற்பகுதியில் ("நாள்"),

"பின்பு தேவன் - நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக, அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன் களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." (ஆதியாகமம் 1:26-27)ஆரம்பத்தில், கடவுள் மனிதனை தம்முடைய தார்மீக சாயலில் படைத்தார், ஆனால் நன்மை

தீமைகளை அறிய அவரது சாயலில் இன்னும் அவர்களை படைக்கவில்லை. பாவத்திற்கு பின், "ஆதாமின் வம்சவரலாறு - தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த நாளிலே அவனைத் தேவசாயலாக உண்டாக்கினார்."(ஆதியாகமம் 5:1) ஆனால் இப்போது தேவனுடைய ரூபம் குறிப்பிடப்பட வில்லை, அது தொலைந்து போனது.

இன்னும் ஏழாயிரம் ஆண்டுகளில் அந்த ரூபத்தை மீட்டெடுப்பதே கடவுளின் திட்டமாக இருந்தது. இந்த சுவிசேஷ யுகத்தில் ஒரு உன்னதமான முன்மாதிரியை வைக்க கற்றுக்கொள்வதே ஆசாரியத்துவப் பயிற்சி. பின்னர் கிறிஸ்துவின் ஆயிரம் வருட இராஜ்யத்தில், இரண்டாம் மரணத்தின் சாபத்திற்கு மாறாக, (உபாகமம் 27:11-28:14)அவர்கள் கீழ்ப்படிதலின் நித்திய ஆசீர்வாதங்களை பூமியில் உலகிற்கு கற்பிப்பார்கள்.

*(4)*.அடோல்ஃப் ஹர்னாக், ஹிஸ்டரி ஆஃப் டாக்மாக, நீல் புக்கானன் (1900), தொகுதி 7 பக்கம் 225 மொழிபெயர்த்தார்.

(4) Adolph Harnack, History of Dogma, translated by Neil Buchanan (1900), Volume 7, page 225).

*(5)*.அறிவுரை. அறிவுரை. 1st ad Polonus — Cardale's true Doctrine — Works of Elder B. W. Stone, பக்கம் 51 (Lonzo Pribble, Theology Simplified; God, His Son and His Spirit (2009), பக்கம் 49. Xlibris Corp.).

(5) Admon. 1st ad Polonus — Cardale's true Doctrine — Works of Elder B. W. Stone, page 51 (Lonzo Pribble, Theology Simplified; God, His Son and His Spirit (2009), page 49. Xlibris Corp.).

இருதயத்தில் இருந்து

# ஆசாரியர்கள் அனுதாபத்தைக்(பரிவு) கற்றுக்கொள்ள வேண்டும்



— Jim Moss

"அன்றியும் மனுஷரில் தெரிந்துகொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி, மனுஷருக்காகத் தேவகாரியங்களைப் பற்றி நியமிக்கப்படுகிறான். தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான். அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிடவேண்டியதுபோல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாயிருக்கிறது."(எபிரெயர் 5:1-3)

"இரக்கம் அனைத்து கிறிஸ்ததவத்திற்கும் அடிப்படையானது. நாம் உன்னதமாக கருதும் எல்லாவற்றின் அடிப்படையும் இதுவே, வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களையும் தாங்கக்கூடியதாகவும் அழகாகவும் ஆக்கும் பண்பு இதுவாகும். பெரும்பாலான மனுக்குலத்தில் உள்ள ஒரு குணம், மனிதநேயம் மீட்கக்கூடியது என்ற நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது." (Eugene Burns)

### அனுதாபம்(பரிவு) - இரட்சிப்புக்கு அவசியம்

கடவுளின் சொந்த சாயலிலும் ரூபத்திலும் ஒரு குடும்பத்தை நிறுவுவதே அவருடைய நித்திய நோக்கமாகும். இந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட பூமிக்குரிய குடும்பம் பாவத்தின் மூலம் தயவை இழந்தது, எனவே நீதியின் அடிப்படையில் நிறுவப்பட்ட படைப்பாளரின் சரியான பண்புகளால் வழங்கப்பட்ட வாழ்க்கைக்கான உரிமையை இழந்தது.

வலி மற்றும் துக்கத்திலிருந்து விடுபட்ட மகிழ்ச்சியான, அமைதியான நித்திய



வாழ்க்கையைப் பெறுவதே மனுக்குலத்தின் விருப்பமாகும். கடவுளின் நீதி திருப்தியடைவதும், பின்னர் மனுக்குலம் தங்கள் உயிரைக் கொடுப்பவருடன் சமரசம் செய்வதும் மட்டுமே ஒரே நம்பிக்கையாக உள்ளது. கேள்வி என்னவென்றால், கடவுளின் நியாயமான தண்டனையை மீறாமல் இதை எப்படி செய்ய முடியும்?

பாவத்தின் சம்பளத்தை அனுபவத்திலிருந்து மனுக்குலம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை கடவுளின் ஞானம் ஆரம்பத்திலிருந்தே அறிந்திருந்தது, மேலும் அவரிடம் ஏற்கனவே ஒரு திட்டம் இருந்தது. மரணத்தில் ஆதாமின் இடத்தைப் பிடிக்க ஒரு பரிபூரண மனிதனாக ஆவதற்கு, அவருடைய "ஒரே பேறான குமாரன்" மீட்கும்பொருளை வழங்குவதன் மூலம் கடவுளுடைய இரக்கம் அவருடைய நீதியை தாண்டி நிரம்பி வழிந்தது.

கடவுளின் இரக்கம் இல்லாமல் மனுக்குலத்திற்கு எந்த நம்பிக்கையும் இருந்திருக்காது, மீட்கும் பொருளும் இல்லை, பாவநிவாரண பலியும் இல்லை, மேலும் ஒரு பிரதான ஆசாரியர் அல்லது இராஜரீகமான ஆசாரியத்துவம் தேவை இருந்திருக்காது. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்.", "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (ரோமர் 5:8, யோவான் 3:16)

மனிதநேயம் - அனுதாபத்தின் பொருள்

"இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்."(சங்கீதம் 51:5)பாவத்தின் சம்பளம் மன, ஒழுக்க மற்றும் உடல் ரீதியான துன்பங்களில் விளைகிறது, இதில் நோய், வலி, துக்கம் மற்றும் இறுதியாக மரணம். (ரோமர் 6:23)கடவுள் அவனை "நல்லவர்" என்று சொன்னபோது மனிதனிடம் இயல்பாக இருந்த இருதய இரக்கம் வீழ்ச்சியின் மூலம் கடுமையாக சேதமடைந்தது. ஏதேனிலிருந்து முற்றுப்பெறாத பூமியில் ஆதாமும் ஏவாளும் தள்ளப்பட்டதால், உயிர்வாழ்வதற்கான தேவைகளை வழங்குவதற்குத் தேவையான வியர்வை, சுமை மற்றும் வலி ஆகியவை மனிதனை அடிமையாக்கியுள்ளது. (ஆதியாகமம் 3:19-23)எஞ்சியிருக்கும் நேரம், உயிர் மற்றும் வளங்கள் எதுவாக இருந்தாலும், பெரும்பாலும் சுயநல இன்பங்களினால் உறிஞ்சப்பட்டு, மற்றவர்களின் தேவைகளுக்கு உணர்திறன் உணர்வின்மை ஏற்படுகிறது.

## நம்முடைய பிரதான ஆசாரியனாகிய இயேசு அனுதாபப்படுகிறார்

லோகோஸின் (கடவுளின் ஒரே மகன்) பணி இரண்டு மடங்கு - (1)மனிதனை மீட்பதற்காக மீட்கும் விலையை செலுத்துவதன் மூலம் நீதியை திருப்திப்படுத்த ஒரு மனிதனாக மாறினார். மற்றும் (2) மனிதனை அவனுடைய செயலற்ற நிலையில் இருந்து விடுவிப்பதாகும். (ஏசாயா6:8 )இந்த பிந்தைய வேலை, ஒரு மனிதனாக, மனிதனின் வீழ்ச்சியடைந்த நிலையின் சிரமங்களை அனுபவத்தின் மூலம் புரிந்துகொள்வதன் மூலம் அனுதாபத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

"இரக்கம்" (S4697) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் அர்த்தம், உங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து ஆழமாக நகர்த்தப்படுவதைக் குறிக்கிறது. இது நான்கு சுவிசேஷங்கள் முழுவதும் இயேசுவின் தூய இரக்கத்தை விவரிக்கவும், பாடத்தை விளக்க



உவமைகள் பயன்படுத்தப்படுகிறது. இயேசு தனக்குள் இருந்த இந்த ஆழ்ந்த இரக்கத்தினால் குணப்படுத்தினார். அவர் இரக்கத்தால் நெகிழ்ந்தார். எடுத்துக்காட்டாக- இதோ, இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார், உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின்சென்றார்கள்." (மத்தேயு 20:34).இயேசு கரையில் வந்து, அநேக ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலிருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்." (மாற்கு6:34) பூமியில் இருந்தபோது, இயேசு யூத சட்டத்தின் கீழ் ஒரு ஆசாரியராக இல்லை, ஆனால் அவர் உயிர்த்தெழுதலின் போது நம்முடைய பிரதான ஆசாரியரானார்."நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்." (எபிரெயர் 4:15) சுய விருப்பத்துடன் செயல்பட்டு, முட்டாள்தனமாக - சமரசம் செய்வதற்கு, இயேசு வனாந்தரத்தில் மூன்று முறை சோதிக்கப்பட்டார். (R3717)

இயேசுவின் சோதனைகள் மாம்சம், உலகம் மற்றும் எதிரியிலிருந்து வந்தவை. பாவத்திற்கு அடிபணியாமல், எந்த அபூரண மனிதனும்

செய்யாததை அல்லது செய்ய முடியாததை அவரால் சாதிக்க முடிந்தது.அவர் இதேபோன்ற சோதனைகள், சிரமங்கள் மற்றும் அன்பானவர்களின் இழப்பை அனுபவித்ததால், நம்முடைய பிரதான ஆசாரியராக, நம்முடைய பலவீனங்களில் நம்முடன் அனுதாபம் காட்ட முடிகிறது. "ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். " (எபிரெயர் 2:18) நம்முடைய போராட்டங்களையும் தேவைகளையும் நம்முடைய எஜமான் அறிவார். "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்," (ஏசாயா 53:3) "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது." (மத்தேயு8:17)

"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்." (எபிரெயர் 12:3)"அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி," (எபிரெயர் 5:8-9)

## இராஜரீகமான ஆசாரியத்துவம்

கடவுளின் ஞானமும் அன்பும், விழுந்துபோன படைப்பை மீட்டெடுக்கும் பெரிய வேலையை முன்னறிவித்து, அவருடைய தெய்வீக நிலையில் ஐக்கியப்படுவதற்கான அவரது ஆசை, இராஜரீக ஆசாரியத்துவம் ஆக ஒரு வகுப்பை முன்னறிவித்தது. (1பேதுரு2:9 ) அவருடைய குமாரனாகிய கிறிஸ்து இயேசுவின் பெயரைப் பெற்றுக் கொள்ள அழைக்கப்பட்ட ஜனங்கள். (அப்போஸ்தலர் 15:14) இந்த அலுவலகம் அவர்கள், மாம்சத்தில் இருக்கும்போது, பாவத்திற்கு "மரித்தவர்களாக" இருக்க வேண்டும் மற்றும் அவருடன் வாழவும் ஆட்சிசெய்யவும் அவரது துன்பங்களில் பங்குதாரர்களாக இருக்க வேண்டும். (1பேதுரு4:13) அவருடைய வெற்றி "புதிதும் ஜீவனுள்ள பாதையை" திறந்தது. (எபிரெயர் 10:20)

பிரதான ஆசாரியரின் அலுவலகத்தைப் போலவே, ஆதாமின் வீழ்ச்சிக்கு முன்பு இருந்ததைப் போல, மனுக்குலத்தை தங்கள் தந்தையுடன் "ஒப்புரவாக்கி" கொண்டு வருவதற்காக, இராஜரீக ஆசாரியத்துவம் ஏங்கிக்கொண்டிருக்கும் படைப்பின் மீது ஆழ்ந்த அனுதாபத்தைக் காட்ட கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த குறிப்பிடத்தக்க பண்பு, அனுதாபமான இரக்கம், மனுக்குலத்தை அதன் படைப்பாளரின் சாயலுக்கு மீட்டெடுக்க இராஜரீகமான ஆசாரியர்களுக்கு இன்றியமையாதது. மனுக்குலம் தம்முடன் இணக்கமாக இருக்க, மனுக்குலத்தின் அனைத்து தவறுகளும் சரி செய்யப்பட வேண்டும். நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலமாக வைப்பேன் (ஏசாயா 28:17) என்று கடவுள் கோருகிறார்.

அனுதாபத்தை வளர்ப்பது, இது தான் உங்கள் வாழ்க்கையில் அழைப்பா? அவருடைய மகத்தான நோக்கத்திற்காக, அவருடைய நித்திய நோக்கத்திற்காக சிலர் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்பதே கடவுளின் அழைப்பு. இது கடவுளுடைய ஒரு இருதய ஆசை மற்றும் அது அவருடைய வரைபடத்துடன் தொடங்குகிறது. (யோவான் 6:44) அதாவது, பூமியிலுள்ள எல்லா குடும்பங்களையும் பிற்காலத்தில் ஆசீர்வதிப்பதற்காக அவரது அழைப்பு ஏற்றுக் கொள்ளத்தக்க இப்போது பலிகளைச் செலுத்த நாம் தயாராக இருக்கிறோமா ? "எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள், மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை.

(1கொரிந்தியர் 1:26)

இரக்கமும் அனுதாபமும் இராஜரீகமான ஆசாரியத்துவத்திற்குத் தேவையான பரிபூரண அன்பின் அளவிற்கு வளர்க்கப்பட வேண்டும். இது இவ்வாறு தொடருகிறது - (1) தந்தை மற்றும் அவரது மகன் மீது முழுமையான அபிமானத்தையும் நம்பிக்கையையும் வளர்த்து, பின்னர், (2) தந்தை மற்றும் அவரது மகனுடன் இணக்கமாக இல்லாதவர்கள் மீது அனுதாபம் காட்டுவது, அடுத்து, (3) நம்முடைய சொந்த நலன்களையும் சுய விருப்பத்தையும் பலி செலுத்துவதற்கான செலவைக் கணக்கிடுவது, பின்னர், (4) முழு அர்ப்பணிப்புக்கான அழைப்பை ஏற்றுக்கொள்வது (அர்ப்பணிப்பு), இறுதியாக, (5) கடவுளின் ஏற்பாடுகள் மூலம் தன்னை மாற்றிக் கொள்வது. "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." (ரோமர் 12:1, 2)இந்தப் படிகளைப் பின்பற்றுவதன் மூலம், இராஜரீக ஆசாரியத்துவம், மற்ற மனுக்குலத்தைப் போன்ற அதே அவலநிலையில் ஒருமுறை இருந்தாலும், பாவமான உலகத்தை எவ்வாறு கையாள்வது என்பதைக் கற்றுக்கொள்கிறது, அத்தகைய அனுதாபத்தை உணர்ந்து உலகம் ஆறுதலையும் தேறுதலையும் பெறும். (R3067)

இந்த பரலோக அலுவலகத்திற்கு குணத்தின் மாற்றம் தேவைப்படுகிறது, இது பயிற்சி, பயிற்சி மற்றும் அதிக பயிற்சி மூலம் வருகிறது. சுய தியாகத்தின் மூலம் மன்னிப்பு, பொறுமை மற்றும் தாராள மனப்பான்மையைக் கடைப்பிடித்தால். பிறருக்காக நமது மாம்ச ஆசைகளையும் விருப்பங்களையும் தியாகம் செய்வது மட்டுமல்லாமல், மற்ற உலக ஜனங்கள் அனுபவிக்கும் அதே துன்பங்கள் மற்றும் தீமைகள் மூலம் பொறுமையை வளர்த்துக் கொள்கிறோம். பரிசுத்த ஆவியின் வல்லமை மற்றும் செல்வாக்கு மூலம், மற்றவர்களின் தேவைகளை உணர்ந்து கொள்வதில் நாம் சிறந்து விளங்குகிறோம், இது அவர்களுக்கான நமது அனுதாபத்தை அதிகரிக்கிறது.

"ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (கொலோசேயர் 3:12-15)

மற்றவர்களுக்கு தீவிரமாக உதவுவதன் மூலம் அனுதாபம் பெரும்பாலும் உருவாகிறது. —"கர்த்தர் அவனை நோக்கி - உன் கையிலிருக்கிறது என்ன என்றார். ஒரு கோல் என்றான்" (யாத்திராகமம் 4:2) "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய், நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." (பிரசங்கி 9:10)இதற்கு நமது நேரம், ஆற்றல் மற்றும் விருப்பங்களை பலிச் செலுத்த வேண்டும். "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்." (கலாத்தியர் 6:10) ஒருவரின் சொந்த கவலைகளை ஒதுக்கி வைப்பது, மற்றவர்களின் போராட்டங்களில் நுழைவது மற்றும் அவர்களின் சிரமங்களில் ஆர்வம் காட்டுவது என்பதே இதன் பொருளாகும்.

"உங்களால் முடிந்த அனைத்து நன்மைகளையும், உங்களால் முடிந்தவரை,

உங்களால் முடிந்த அனைத்து வழிகளிலும், உங்களால் முடிந்த எல்லா இடங்களிலும், உங்களால் முடிந்த எல்லா நேரங்களிலும், உங்களால் முடிந்தவரை, எல்லா மக்களுக்கும் செய்யுங்கள். " (John Wesley) மற்றவர்களை ஆசீர்வதித்தல் –"உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள், ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள்."(ரோமர் 12:14 )மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்." (1பேதுரு 3:8,9) "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும், அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள், நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். " (லூக்கா6:38)

உங்களால் முடிந்தவரை (இரக்கம், ஆறுதல், தேறுதல்...) இந்தத் திறன்களைச் சேர்க்கவும். மனுக்குலத்தை ஆசீர்வதிக்க இராஜரீகமான ஆசாரியத்துவத்தின் உண்மையான அனுதாபத்தைப் பெற வேண்டும்.

**முடிவுரை**

கிறிஸ்துவின் இராஜ்யத்தின் மறுசீரமைப்பு வேலையைச் செய்ய அனுதாபம் நமக்கு ஊக்கமளிக்கிறது."கர்த்தர் இரக்கமும் மன



உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்."(சங்கீதம் 145:8)"நீங்கள் கர்த்தரிடத்துக்குத் திரும்பினால், உங்கள் சகோதரரும் உங்கள் பிள்ளைகளும் தங்களைச் சிறைபிடித்தவர்களுக்கு முன்பாக இரக்கம் பெறுகிறதற்கும், இந்தத் தேசத்திற்குத் திரும்புகிறதற்கும் அது ஏதுவாகும், உங்கள் தேவனாகிய கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர், நீங்கள் அவரிடத்திற்குத் திரும்பினால், அவர் தம்முடைய முகத்தை உங்களைவிட்டு விலக்குவதில்லை என்றார்கள்." (2நாளாகமம்30:9)

"கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்து போகிறபோது, அவர் - கர்த்தர், கர்த்தர், இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும் சத்தியமுமுள்ள தேவன். (யாத்திராகமம் 34:6) திரைக்கு அப்பால் நாம் அவரை பார்க்கும் வரை, கடவுளின் இரக்கத்தை பெறும் போது, நாம் அவரை மிக நெருக்கமாக பார்க்கலாம். அதேநேரத்தில், இந்தப் பக்கம் மற்றவர்களுக்கு தீவிரமாக உதவுவதன் மூலம் அனுதாபத்தையும் உருவாக்குகிறது.

முதலில் சுயத்தைக் கட்டுப்படுத்துதல்

# ஆசாரியர்கள் சுய கட்டுப்பாட்டை சுயமாக வளர்த்துக் கொள்ள வேண்டும்



Derek Place and James Parkinson

"மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்."(1கொரிந்தியர் 9:27).

வேதாகமஅடிப்படையில், அடிபணிதல் என்பது கடவுளின் அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்து, அவருடைய தெய்வீகத் திட்டத்திற்கும் நோக்கத்திற்கும் ஒருவரின் விருப்பத்தை ஒப்படைப்பதைக் குறிக்கிறது. கீழ்ப்படிதலுக்கு சுய கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கம் தேவை.

ஆனால் சுய கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கத்தை எவ்வாறு வளர்த்துக் கொள்வது ? நாம் இந்த திறன்களுடன் பிறக்கவில்லை, கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் வளர்ந்து முதிர்ச்சியடையும் போது அவற்றை நாம் வளர்க்க வேண்டும். சுய கட்டுபாட்டை வளர்ப்பதற்கு - கலாத்தியர் 5:16"பின்னும் நான் சொல்லுகிறதென்ன வென்றால், ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்"என்று கூறுகிறது.

### சுயக்கட்டுபாட்டை வளர்த்தல்

"ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" என்று கலாத்தியர் 5:16 கூறுகிறது. 23 ஆம் வசனத்தில் பின்னர் விவரிக்கப்பட்டுள்ள ஆவியின் பலன்களில் ஒன்று நிதானம் அல்லது சுய கட்டுப்பாடு.

ஒருவரின் உணர்ச்சிகள், எண்ணங்கள் மற்றும் நடத்தை சோதிக்கப்பட்டு, தூண்டப்படுகையில் அவைகளை எதிர்கொள்ளும் திறனே சுய கட்டுபாடாகும். சுயக்கட்டுப்பாட்டை நாம் வளர்த்து கொள்வதற்கு நமது வீழந்த மாம்சத்தின் பலவீனத்தை எவ்வாறு சமாளிப்பது ? நாம் பயன்படுத்தக்கூடிய வேத வசனங்களில் இதற்கான கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இயேசு ஞானஸ்நானம் பெற்ற பிறகு, வசனங்களை பயன்படுத்தி பிசாசின் சோதனைகளை அகற்ற முடிந்தது. நம் வாழ்வில் சோதனைகளை சமாளிக்க உதவும்படி கர்த்தரிடம் எவ்வாறு ஜெபிக்கலாம் என்பதால், ஜெபத்தின் வல்லமையை கடவுளுடைய



வார்த்தைகள் நமக்குக் காட்டுகிறது. நமது உணர்ச்சிகள் மற்றும் தூண்டுதல்களை ஒழுங்குபடுத்துவதற்கு அதிக சுய கட்டுப்பாடு தேவைப்படுகிறது.

தூண்டுதல்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதை உறுப்பினர்களுக்கு உதவ, சொற்றொடர்கள் அல்லது முக்கிய வார்த்தைகளின் சுருக்கத்தை சுய உதவிக்

குழுக்கள், பயன்படுத்துகின்றன. அவற்றில் ஒன்று HALT என்ற சொல். HALT என்பதன் சுருக்கம் - பசி கோபம், தனிமை மற்றும் சோர்வு போன்றவை உங்களை அதிகமாக மேற்கொள்ள விடாதீர்கள். இந்த உணர்ச்சித் தூண்டுதல்கள் கட்டுப்பாட்டை இழந்து மோசமான முடிவெடுக்கும். போதுமான தூக்கம், சரியான ஊட்டச்சத்து, அல்லது உடற்பயிற்சி ஆகியவை, நாம் மனக்கிளர்ச்சி மற்றும் விருப்பமின்மைக்கு காரணமாக இருக்கலாம். கடவுளின் உதவியால் நாம் மாம்சத்தின் பலீனங்களை வெல்ல முடியும், இறுதியில் நாம் சுய கட்டுப்பாட்டைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**சுயக்கட்டுபாட்டை வளர்த்தல்**

முதல் ஆசாரியத்துவத்தில் கட்டுப்பாடு இல்லாததற்கு வேதாகமம் எடுத்துக்காட்டுகளைத் தருகிறது.

லேவியராகமம் 10 ஆம் அதிகாரத்தில், நாதாபும் அபியுவும் கடவுளுக்கு முன்பாக அந்நிய அக்கினியை கொண்டுவந்ததற்காக கடவுளால் அழிக்கப்பட்டனர். யூதர்களின் காலத்தில் முதல் ஆசாரியத்துவத்திற்கான தரநிலை கடவுளின் அறிவுரைகளை சரியாகப் பின்பற்றுவது இல்லாவிட்டால், மரண தண்டனையை எதிர்கொள்ளவேண்டும். இருப்பினும், இயேசுவின் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றியதன் மூலம் யூத சட்டம் சிலுவையில் அறையப்பட்ட நிலையில், ஆசாரியத்துவத்தில் அங்கம் வகிக்கும் யூத சகோதரர்கள் கூட தங்கள் கடமைகளில் தவறுகளுக்காக மரண தண்டனைக்கு உட்பட்டவர்கள் அல்ல. இயேசு கிறிஸ்துவை தங்கள் மீட்பராக ஏற்றுக்கொள்வதன் மூலம் அவர்கள் இனி மோசேயின் சட்டத்தின் கீழ் இருப்பதில்லை. ஆயினும், கூட பாவம் செய்வதற்கு எந்த ஒரு காரணத்தையும் கொடுப்பதில்லை, அல்லது இராஜரீகமான ஆசாரியத்துவம் மற்றும் அடையாளமான சபையில் ஒரு பதவிக்கு தயாராக இருப்பவர்களிடமிருந்து கடவுள் எதிர்பார்க்கும் உயர் தரத்தை குறைப்பதும் இல்லை.

நாதாப் மற்றும் அபியுவின் வெட்கக்கேடான கீழ்ப்படியாமை உடனடியாக ஆசாரியர்களின் கட்டளையை பின்பற்றியது. "ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறபோது, திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்கவேண்டாம்." (லேவியராகமம் 10:8-11) வாசஸ்தலத்தில் காணிக்கை செலுத்தும்போது நாதாபும் அபியுவும் குடித்திருக்கலாம் என்று இது தெரிவிக்கிறது. இப்போது இராஜரீக ஆசாரியத்துவத்திற்கான பயிற்சியில் இருப்பவர்கள், இந்த தடையானது வாழ்க்கையின் பல தடைசெய்யப்பட்ட பகுதிகளை உள்ளடக்கியிருக்கிறது என்பதை கவனத்தில் கொண்டு புரிந்துகொள்வது நல்லது.

முதல் ஆசாரியத்துவத்தை திரும்பிப் பார்க்கையில், நமது நிலையை நோக்கி நாம் எவ்வாறு நவீன அணுகுமுறையை உருவாக்க வேண்டும் என்பதற்கான எடுத்துக்காட்டுகள், வகைகள் மற்றும் நிழல்களை வழங்குகிறது. இயேசு பூமியில் பிரதான ஆசாரியனாக இல்லாதது போல (எபிரெயர் *8:4*) நாமும் இங்கே ஆசாரியர்களாக இல்லை. பரலோக ஆசாரியத்துவத்தில் நமது எதிர்காலத்திற்கான பயிற்சியில் இருக்கிறோம். நாம் இயேசுவைப்போல (ஆரோனால் குறிக்கப்படுகிறது) பிரதான ஆசாரியர் அல்ல. நாம் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆசாரியர்கள் அல்லது சரீர அங்கத்தினர்களாக இருக்கவேண்டும்.

நவீன உறுப்பினர்களாகிய நாம், முதலில், தங்கள் ஆசாரியத்துவத்தின் உறுப்பினர்களாக தங்கள் தேவைகளை பூர்த்தி செய்யவதை முதல் திரும்பிப் பாாக்க வேண்டும். நமது நவீன வளர்ச்சியில் நாம் வளரும் போது நாம் எடுக்க வேண்டிய படிகள் உள்ளன. மகிமையைப் பெறுவதற்குத் தகுதிபெற,



நமது அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை சுய பலி மற்றும் சுத்திகரித்தல் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவது திரையைத் தாண்டி மகா பரிசுத்தமான இடத்திற்குச் செல்லும்போதுதான் நாம் மகிமை அடையமுடியும். இதற்கு, நாம் முதலில் இயேசுவின் சாயலைப் பெற உளியினால் செதுக்கப்பட்டு, உண்மையான சபையாகப் பொருந்த வேண்டும். பிறகு, உலக ஜனங்களை ஆசீர்வதிக்க ஆசாரியப் பணிகளைச் செய்யலாம்.

## தேவைகள் மற்றும் உதவிகள்

பாவம் நிறைந்த உலகத்திலோ அல்லது பாளைய நிலைமையிலோ நம்முடைய இருதயத்தின் விருப்பம் இருந்தால், நாம் சுத்திகரிக்கப்பட மாட்டோம், மேலும் வாக்குத்தத்தம் அளிக்கப்பட்ட அனைத்தையும் இழக்க நேரிடும்."பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்."(சங்கீதம் 50:5) இந்த உடன்படிக்கைக்கு மேலே வரையறுக்கப்பட்டுள்ளபடி சுய கட்டுப்பாடு அல்லது கீழ்ப்படிதல் தேவைப்படுகிறது - கடவுளின் அதிகாரத்திற்கு அடிபணிதல் மற்றும் அவரது தெய்வீக திட்டம் மற்றும் நோக்கத்திற்கு ஒருவரின் சொந்த விருப்பம் ஒப்படைக்கப்படவேண்டும்.

கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை அடையாளப்படுத்தும் நவீன ஆசாரிய வஸ்திரங்களையும் நாம் தொடர்ந்து அணிய வேண்டும். விசித்திரமான நெருப்பை வழங்குவது போல.

அவரது பாதுகாப்பு இல்லாமல் உலகத்துடன் தொடர்புகொள்வது இரண்டாம் மரணத்திற்கு வழிவகுக்கும்.ஆசாரிய பதவி மற்றும் கடமைகளை நாம் புறக்கணித்தால் எந்த உத்தரவாதமும் இல்லை. "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள், ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை."(1யோவான் 2:15)

நம்மை நாமே தண்டிக்கவும், திருத்திக்கொள்ளவும் ஒழுக்கமும், சுய கட்டுப்பாடும் தேவை. நாம் அதைப் பயிற்சி செய்யாவிட்டால், தந்தை தனது அன்பான கவனிப்பில், இந்தப் பாடங்களை நமக்குக் கற்பிக்க. இதனால் நாம் நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தி கொள்ளலாம்.

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய

இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை...நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்..." (ரோமர் 12:1, 2)

பயிற்சியில் நவீன ஆசாரியர்களாக சுயகட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ளலாம். பிதா, அவருடைய குமாரன் இயேசு, காணப்படாத பரிசுத்த தூதர்கள் மற்றும் கிறிஸ்துவில் உள்ள நமது சகோதர சகோதரிகள் ஆகியோரிடமிருந்து நமக்கு கிடைக்கும் எல்லா ஆதரவையும் நினைத்துப் பாருங்கள். ஜெபத்தின் வல்லமையும், கடவுளுடைய வார்த்தையும் நம் விரல் நுனியில் உள்ளது. இன்று மனுக்குலத்தின் உலகத்தை காட்டிலும் நமக்கு ஒரு நன்மை உள்ளது, ஏனெனில் கடவுள் தனது மீட்பின் திட்டத்தை பயிற்சியில் தனது ஆசாரியத்துவத்திற்கு வெளிப்படுத்தியுள்ளார். அதில் உறுப்பினர்களாக இருக்க நம்மை அழைத்துள்ளார். இந்த தகுதியற்ற சலுகைகளை நாம் ஒவ்வொருவரும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வோம்.

## இல்லாததை நிரப்பவும்

நாம் நிரப்ப வேண்டும் என்று அப்போஸ்தலன் பவுல் எழுதினார். "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்." (கொலோசேயர் 1:24) துன்பங்கள் ஒரு கிறிஸ்தவரின் குணத்தை வளர்க்க உதவினாலும், கல்வாரியில் இயேசு வழங்கிய மீட்கும் விலையில் எதையும் சேர்க்க வேண்டும் என்று அர்த்தமில்லை. இயேசு கிறிஸ்து ஒரு முறை அனைவருக்காகவும் மரித்தார். (எபிரெயர் 7:27) ஆனால் மனுக்குலத்தின் ஒவ்வொரு துயரமான அனுபவத்திலும் இயேசுவால் மட்டுமே பங்கு கொள்ள முடியவிட்டாலும், பயிற்சியில் உள்ள 1,44,000 சரீர உறுப்பினர்கள் நடைமுறையில் மனுக்குலத்தின் ஒவ்வொரு "துன்பத்தையும்" அனுபவிக்க முடியும், அதே நேரத்தில் அவர்கள் உண்மையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

இதன் விளைவாக, கிறிஸ்துவின் இராஜ்யத்தின் மறுபிறப்பில் உள்ள ஒவ்வொரு நபரும், உண்மையுள்ள சிலர் இதேபோன்ற அனுபவத்தை அனுபவித்திருப்பதை அறிந்துகொள்வார்கள். அவர்களுக்கு உதாரணமாக இந்த உண்மையுள்ளவர்கள் காட்டப்படுவார்கள். அவர்கள் தனது முன்னோடிகளின் சுயக் கட்டுப்பாட்டைப் பற்றிக் கேள்விப்படுவார், மேலும் அவர் தன்னைத்தானே மேற்கொள்ள முடியும் என்பதை அறிந்துகொள்வார்கள். அதுவே நித்திய வாழ்வுக்கான பாதையாக இருக்கும்.

மரணம் வரை விசுவாசமுள்ளவர்

# ஆசாரியர்கள் விசுவாசத்தோடு இருக்க வேண்டும்



— Percival Blenman

"இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள். மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்."(எபிரெயர் 3:1-2)

இஸ்ரயேல் தேசத்தின் நல்வாழ்விற்கும் உயிர்வாழ்வதற்கும் ஆசாரியத்துவத்தின் நிலை முக்கியமானது. இராஜா அத்தியாவசியமான தேசிய முடிவுகளை எடுக்கலாம் என்றாலும், நல்லது அல்லது கெட்டது, அவரது பங்கில் இருக்கும் ஆசாரியர்கள் நாட்டை உருவாக்கலாம் அல்லது உடைக்கலாம்.

## ஆசாரியத்துவத்தின் பொறுப்புகள்

ஆசாரியத்துவத்தைக் கருத்தில் கொள்ளும்போது, அவர்கள் மக்களுக்காகவும் தங்களுக்காகவும் செய்த தினசரி மற்றும் வருடாந்திர பலிகளைப் பற்றி நாம் பொதுவாக நினைக்கிறோம். (லேவியாராகமம் 16:3 மற்றும் தொடர்ந்து) இருப்பினும், அவர்களின் பங்கு ஒப்புரவாக்குதலுக்கு அப்பாற்பட்டது. பிரதான ஆசாரியர் ஜனங்களின் அன்றாட உடல்நலப் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் வீடுகளைப் பாதிக்கும் பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்து உரையாற்றினார். (லேவியாராகமம் 13, 14:1-32,33-53)திருமணத்தில் உள்ள உறவுச் சிக்கல்களையும் அவர் எடுத்துரைத்தார். (எண்ணாகமம் 5:11-31) ஆலயத்தில் நிதி விவகாரங்கள் மற்றும் பழுதுப் பார்த்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கும் அவர் பொறுப்பாக இருந்தார்.(2இராஜாக்கள் 12:4-12, எண்ணாகமம் 18:14, 21) இந்தப் பொறுப்புகளுக்கு அப்பால், ஆசாரியர்கள் தமக்காகவும், மற்ற ஆசாரியர்களுக்காகவும் போஜனப் பலிகளைச் செய்தார்கள். (லேவியாராகமம் 6:8-18)



ஒரு ஆசாரியர் நியாயப்பிரமாணத்தைப் பற்றிய நல்ல புரிதலும் கிரகித்தலும் கொண்டிருக்க வேண்டும்.இந்தத் தேவை அவசியமானது, ஏனெனில், அவரது பங்கில், அவர் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளுக்குக் கட்டுப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. கூடுதலாக, கடவுள் அவர்களிடமிருந்து பிரமாணத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதைப் பற்றி ஜனங்களுக்கு கற்பிப்பதே அவர்களுக்கு கற்பிப்பதாகும். (லேவியராகமம் 10:10-11, உபாகமம் 33:10, உபாகமம் 17:9-11)

## ஆசாரியரின் ஆவிக்குரிய மற்றும் அரசியலில் பங்கு

வீட்டில் தங்கள் பிள்ளைகளுக்கு தார்மீக முன்மாதிரியை வைக்கும் பெற்றொரைப் போல, ஒரு ஆசாரியர் தனது குடும்பத்திற்கும் முழு தேசத்திற்கும் ஒரு தகுதியான முன்மாதிரியைப் பராமரிக்க பொறுப்பாளியாக இருந்தார். (லேவியராகமம் 21:16)

இருப்பினும், ஒரு பாதிரியாரின் தார்மீக முன்மாதிரி, அவருடைய வீட்டாரின் மற்றும் தேசத்தின்

தேவைகளைக் கவனிப்பதற்கு அப்பால் நீட்டிக்கப்பட்டது. அவர் இராஜாவுக்கு ஆலோசனை வழங்கவும், கடவுளிடம் அவருக்காக பரிந்துரை செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இராஜாவுக்கும் ஆசாரியர் வகுப்பினருக்கும் இடையிலான இந்த தொடர்புக்கு ஒரு உதாரணம், ஆசாரியர், தீர்க்கதரிசி எரேமியா மற்றும் இராஜா சிதேக்கியா ஆகியோருக்கு இடையே உள்ள பிரச்சனைக்குரிய உறவில் காணலாம். இந்த எடுத்துக்காட்டில், இராஜா எரேமியாவிடம் - "கர்த்தரிடமிருந்து ஏதாவது வார்த்தை உண்டா? என்று கேட்டதை கவனிக்கலாம்- "கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ என்ற இராஜா அவனைத் தன் வீட்டிலே இரகசியமாய்க் கேட்டான்."(எரேமியா 37:16,17)சிதேக்கியா இராஜா கடவுளிடமிருந்து வழிகாட்டுதலைத் தேடிக்கொண்டிருந்தார், அந்தத் தகவலுக்காக எரேமியா தீர்க்கதரிசியிடம் திரும்பினார்.

அதுபோலவே, தேசத்தின் சார்பாகப் போருக்குச் சொல்வது போன்ற முக்கியமான முடிவை எடுக்க வேண்டியிருக்கும் போது, ஜனங்கள் ஆசாரியர் மூலம் கடவுளிடம் ஆலோசனை கேட்டனர். ஆசாரியனைத் தவிர வேறு யாரும் ஜனங்கள் சார்பாக தூபம் காட்டி கடவுளை அணுக முடியாது. (எண்ணாகமம் 16:40, நியாயாதிபதி 20:27-,28)ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றவர்கள், ஜனங்களின் சார்பாக கடவுளை அணுக முடியும். (நியாயாதிபதிகள் 6:36-40)

எனவே, இஸ்ரயேலின் இராஜா, ஆசாரியர் அல்லது தீர்க்கதரிசி மூலம் கடவுளைக் கலந்தாலோசித்த பிறகு, தேசத்தின் சார்பாக குறிப்பிடத்தக்க முடிவுகளை எடுப்பது புத்திசாலித்தனமாக இருந்தது. ஒரு இராஜா கடவுளைக் கலந்தாலோசிக்காமல் அவசர முடிவுகளை எடுத்தால், அதன் விளைவுகள் பெரும்பாலும் பேரழிவை ஏற்படுத்தும். (2சாமுயேல் 24 காண்க)

## ஆசாரியர்கள் கடவுளுக்கு உண்மையாக இருந்தபோது இஸ்ரயேலரின் வாழ்க்கை

இஸ்ரயேல் ஜனங்கள் பொதுவாக இராஜா மற்றும் ஆசாரியர்களின் முன்மாதிரியைப் பின்பற்றினர். எனவே அவர்கள் நல்ல உதாரணங்களை வழங்கிய போது, தேசம் செழித்தது. இதன் விளைவாக, ஜனங்கள் ஏராளமான உணவு, நல்ல ஆரோக்கியம் மற்றும் மக்கள் தொகையின் வளர்ச்சியை அனுபவித்தனர். (யாத்திராகமம் 23:25-33)

இஸ்ரயேலர்கள் பொருளாதாரச் செழுமையையும், நல்ல ஆரோக்கியத்தையும் அனுபவித்தது மட்டுமல்லாமல், அண்டை வீட்டார் அவர்களுக்கு எதிராகப் போரிட்டபோது அவர்கள் வெற்றியும் பெற்றனர். ஒரு உதாரணத்திற்கு, எரிகோ நகரம் பெஞ்சமின் கோத்திரத்தின் ஒரு பகுதியாக மாறுவதற்கு முன்பு, அது பல்வேறு எமோரிய அல்லது கானானிய ஜாதியினரால் கட்டுப்படுத்தப்பட்டது. (யோசுவா 24:11)நகரம் சுற்றி உயரமான கோட்டை இருந்தது. சுவர்கள் ஊடுருவ முடியாததாகத் தோன்றியது.

இருப்பினும், எரிகோ நகரைக் கைப்பற்றுவதில் கடவுள் ஆசாரியர்களுக்கு ஒரு முக்கிய பங்கைக் கொடுத்தார். ஏழு நாட்களும் எக்காளங்களை ஊதிக் கொண்டு, எரிகோ நகரைச் சுற்றி நடந்த அணிவகுப்பில் ஏழு ஆசாரியர்கள் முக்கியமானவர்களாக இருக்க வேண்டும் என்று கடவுள் கட்டளையிட்டார். முற்றுகையில் அவர்களின் பங்கு இறுதியில் நகரத்தின் சுவர்கள் இஸ்ரயேலுக்கு முன்னால் இடிந்து விழுவதற்கு வழிவகுத்தது. சுவர் இடிந்தபோது, இஸ்ரயேலர்கள் மிக எளிமையாக எரிகோவைக் கைப்பற்றினர். (யோசுவா5:13,6:27). முற்றுகையின் போது ஆசாரியர்கள் கடவுளும் யோசுவாவும் அவர்களுக்கு அறிவுறுத்தியபடி செய்யாவிட்டால் என்ன நடந்திருக்கும் என்பதைக் கவனியுங்கள். (ஆசாரியத்துவத்தின் பயிற்சியில் இருக்கும் நமக்கு இது இன்று ஒரு பாடமாக இருக்கவேண்டும். ) எண்ணாகமம் 25,பினேகாசின் தைரியமான உதாரணத்தை விவரிக்கிறது. (ஆரோனின் குமாரனாகிய எலியேசரின் குமாரன்)

இவர் மோவாபியப் பெண்களுடன் இஸ்ரயேலர்கள்

செய்த அருவருப்பான செயல்களையும், அவர்களின் சிலைகளுக்குப் பலியிடுவதையும் கண்டு விரைவாகச் செயல்பட்டவர். (எண்ணாகமம் 25:19) விபச்சாரத்திற்கு எதிரான அவரது நேர்மறையான நடவடிக்கையின் விளைவாக, அவரது சந்ததியினர் மூலம் ஆசாரியத்துவத்தைத் தொடர ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டது. (எண்ணாகமம் 25:10-13)

## இஸ்ரயேல் நல்ல ஆசாரியர்களையும் தீய ஆசாரியர்களையும் சந்தித்தது

ஆசாரியனாகிய யோய்தாவும் அவரது மனைவி யோசேபியாத் கடைசி அரச குழந்தை யோவாசைஅவருடைய மாற்றாந்தாய் கொல்லுவதில் இருந்து காப்பாற்றினர். இராஜாவாக முடிசூடும் வயது வரை அவனை மறைத்து ஆலயத்தில் வளர்த்தார்கள். (2நாளாகமம்22:10,23:16)

(துரதிர்ஷ்டவசமாக, யோவாஸ் அந்த இரக்கத்திற்கு பதில் செய்யவில்லை)

எரேமியா ஒரு நல்ல ஆசாரியருக்கு மாதிரியானவர், சில சமயங்களில் அவருடைய உண்மை தன்மையினால் உபத்திரவப்பட்டாலும் அவர் உண்மையாகவே தேவனுக்கு ஊழியம் செய்தார். சில தனிப்பட்ட குறைபாடுகள் இருந்தபோதிலும், கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்த ஒரு உண்மையுள்ள ஆசாரியருக்கு ஆரோனும் ஒரு எடுத்துக்காட்டு. விசுவாசமுள்ள ஆசாரியருக்கு எஸ்றா மற்றொரு உதாரணம். எருசலேமில் உள்ள ஆலயத்தை மீட்டெடுப்பதில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.(எஸ்றா3:1-13 )அவரது பெயரைக் கொண்ட புத்தகத்தைத் தவிர, 1வது மற்றும் 2வது நாளாகமம் புத்தகங்களின் சில உள்ளடக்கங்களை எழுதுவதில் எஸ்றாபங்கு வகித்திருக்கலாம்.

அவர் சங்கீதம் *119.1* க்கு பங்களித்ததாகவும் கருதப்படுகிறது{(1) Adams, Heather (2023, October 9). Who Was Ezra and Why Is His Book Significant? Bible Study Tools. https://www.biblestudytools.com/biblestudy/



topicalstudies/whowasezraandwhyishisbook-significant.html}

இருப்பினும், எல்லா ஆசாரியர்களும் விசுவாசத்தின் முன்மாதிரிகள் அல்ல. முதலாவதாக, நாதாப் அபியூவின் எடுத்துக்காட்டுகளை பார்க்கலாம். கடவுளுக்கு முன்பாக "அந்நிய அக்கினியை" வழங்குவதற்கு தூபகலசத்தை பயன்படுத்தினார்கள். அவர்களின் வினோதமான காணிக்கை அங்கீகரிக்கப்படவில்லை, அதற்காக அவர்கள் ஜீவனைச் செலுத்தினார்கள். (யாத்திராகமம் 30:9, லேவியராகமம் 10:12)பின்னர் ஏலியின் குமாரர்கள் (ஓப்பினி, பினேகாஸ்) இரக்கமற்ற மற்றும் ஊழல்வாதிகளின் உதாரணங்கள். இந்த மனிதர்கள் சுயநலத்துடன் தங்கள் சொந்த நலனுக்காக ஜனங்களிடமிருந்து மிரட்டி வளங்களைப் பறித்தனர். இந்த மனிதர்கள் இறுதியில் கடவுளால் கொல்லப்பட்டனர், இதன் விளைவாக கடவுள் ஏலியின் வீட்டாரை நிராகரித்தார். (1சாமுயேல் 2:1236)

ஆசாரியர்களின் இந்த மோசமான எடுத்துக்காட்டுகள் ஆசாரியத்துவத்தின் நற்பெயரை மேம்படுத்த எதுவும் செய்யவில்லை.

## ஆசாரியத்துவம் தோல்வியடைந்தபோது இஸ்ரயேலின் ஆவிக்குரிய ஆரோக்கியம்

துரதிர்ஷ்டவசமாக, எல்லா ஆசாரியர்களும் தூய வணக்கத்தை மேம்படுத்துவதற்காக தங்கள் உடன்படிக்கைக்கு உண்மையாக இருக்கவில்லை. லேவியராகமம் 8 இல் ஆசாரியத்துவம்



அதிகாரப்பூர்வமாக நிறுவப்படுவதற்கு முன்பே இது போன்ற முதல் தோல்வி தொடங்கியது. கடவுளிடமிருந்து கட்டளைகளைப் பெற மோசே மலையில் இருந்தபோது, மோசேக்கு என்ன நேர்ந்தது என்று ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள், அமைதியின்மை ஏற்பட்டது. அவர்கள் ஆரோனை அணுகி, தாங்கள் வழிபடுவதற்காக ஒரு சிலையை உருவாக்கும்படி கோரினார்கள். ஆரோன் என்ன செய்தார் ? அவர் ஒரு நிலைப்பாட்டை எடுத்து, ஜனங்களின் விருப்பத்தைப் பின்பற்ற மறுத்தாரா ?இல்லை! ஆரோன் அவர்களின் விருப்பத்திற்கு இணங்கினார், அதனால் ஜனங்கள் உருவ வழிபாட்டில் ஈடுபட்டனர். மோசே மலையிலிருந்து இறங்கியபோது, பாளையத்தில் குழப்பம் மற்றும் களியாட்டத்தை கண்டார். அவர் ஆரோனை எதிர்கொண்டார், அவர் தனது தோல்விகளுக்கு பொறுப்பேற்கவில்லை, ஆனால் தங்க கன்று வெறுமனே நெருப்பிலிருந்து வெளியே வந்தது என்று பரிந்துரைத்தார். (யாத்திராகமம் 32:1724)ஆரோனின் தோல்வியின் விளைவாக மோசே தனது சகோதரர் உருவாக்கிய சூழ்நிலையை சரிசெய்ய சரியான நடவடிக்கை எடுத்தார். (யாத்திராகமம் 32:19,20)

ஓசியா தீர்க்கதரிசியின் காலத்தில் மற்றொரு தோல்வி ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் ஆசாரியர்களாகச் சேவை செய்தவர்களும் கூட மலைகளிலும் குன்றுகளிலும் பொய்க் கடவுள்களுக்குப் பலியிட்டனர். இந்த ஆசாரிய தோல்விகளின் விளைவாக கடவுள் இஸ்ரயேல் மற்றும் யுதாவின் மீது தண்டனையை அறிவித்தார். (ஓசியா 4:4,5:2)

## விசுவாசமற்ற ஆசாரியரகளின் நீண்டகால தாக்கம்

ஆசாரியர்களின் மோசமான முன்மாதிரியை வைத்து, பொய் வணக்கத்தில் ஈடுப்பட்டு ஜனங்களுடன் இணைந்தபோது, தேசத்தின் தார்மீக மற்றும் ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கும் எதிர்மறையான விளைவுகள் ஏற்பட்டது. இது இறுதியில் ஜனங்களை மற்ற நாடுகளால் சிறைபிடிக்க வழிவகுத்தது. (1இராஜாக்கள் 12:28-31, 2இராஜாக்கள் 17:5-23) இருப்பினும், நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகையிட்டு கைப்பற்றியபோது, சிறைபிடிப்பு இறுதியில் யூதா இராஜ்யத்திற்கும் நீட்டிக்கப்பட்டது.(2 இராஜாக்கள் 24:10-17)

பல்வேறு இராஜாக்கள் மற்றும் ஆசாரியர்களின் தோல்விகள் இரு இராஜ்யங்களும் தங்கள் சுதந்திரத்தை இழந்து, அந்நிய நாடுகளால் அவமானப்படுத்தப்பட்டன.

## நிஜமான ஆசாரியத்துவம் மற்றும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள்

நிழலான ஆசாரியத்துவத்தில், தங்கள் கடமைகளை உண்மையாக நிறைவேற்றாத அபூரண மனிதர்களின் தோல்விகளைக் கண்டோம். இருப்பினும், இப்போது பிரதான ஆசாரியராகவும் இராஜாவாகவும் இருக்கும் கர்த்தராகிய இயேசுவின் உதாரணம் நம்பிக்கைக்கு காரணம் இருக்கிறது.

ஆரோன் பொன் கன்றுக்குட்டியின் விஷயத்தில் நடந்துக்கொண்டது போல, இயேசு சமரசம் செய்யும் சூழ்நிலையை எதிர்கொண்டபோது, பாகால் வழிபாட்டை எதிர்கொண்டபோது உண்மையுள்ள பினேகாஸ் தீர்க்கமான முடிவை எடுத்தது போல அவர் தீர்க்கமான நடவடிக்கை எடுத்தார். ஆலயத்தில் பணம் மாற்றுபவர்கள் ஜனங்களைச் சாதகமாகப் பயன்படுத்துவதை இயேசு கண்டபோது, அவர்களை வெளியேற்றுவதில் நேரத்தை வீணடிக்கவில்லை. "இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே

விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து- என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்ற எழுதியிருக்கிறது, நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்."(மத்தேயு21:12,13)

கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரித்தபோது, ஒரு முறை,இறுதியாக பலியை செலுத்துவதில் தனது பங்கை உண்மையாக முடித்தார். (எபிரெயர் 10:118 ) அவர் மனிதர்களின் அழுத்தத்தின் கீழ் உறுதியாக இருந்தார், நம் சார்பாக மரணம் வரை துன்பப்பட்டார். (எபிரெயர் 12:2, ஏசாயா53:5,7)

கிறிஸ்து கடவுளுக்கு செய்த சத்தியத்தில் உண்மையாக இருக்கவில்லை என்றால், நமது தற்போதைய நிலையை ஒருவர் கற்பனை செய்து பார்க்க முடியும். (எபிரெயர் 10:9)

பிசாசை வணங்க வேண்டும் என்ற சூழ்நிலைக்கு கிறிஸ்து சாத்தானின் தூண்டுதலுக்கு அடிபணிந்திருந்தால், என்ன நடந்திருக்கும்? ?(மத்தேயு4:9) மகிழ்ச்சி, அது நடக்கவில்லை! !இயேசு இறுதிவரை உண்மையாகவும் விசுவாசத்துடனும் இருந்தார் (வெளிப்படுத்துதல் 3:14), அதனால் அவர் உண்மையான பிரதான ஆசாரியரானார்.

முன்மாதிரியான பிரதான ஆசாரியர் போலவே, பயிற்சியில் கீழ் ஆசாரியர் வகுப்பும் உள்ளது, அதை நாம் சபை என்று அழைக்கிறோம்.(1பேதுரு2:5,9) திருச்சபை இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும், இயேசுவின் முன்மாதிரியைப் போல துன்பப்பட வேண்டும், அவர்கள் மரணம் வரை உண்மையாக இருக்க வேண்டும். (1கொரிந்தியர் 10:16, வெளிப்படுத்துதல்2:10)

மகிழ்ச்சிகரமாக, கிறிஸ்து பூமியில் இருந்தபோது அவருக்கு முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு சவாலையும் எதிர்கொண்டு உண்மையாக இருந்தார். (எபிரெயர் 4:15) அவருடைய உண்மைத்தன்மை நம்பிக்கைக்கு உறுதியான தளத்தை அளிக்கிறது. ஆகவே, இயேசுவின் விசுவாசமுள்ள பலி, ஒரு முறை செலுத்தப்பட்டது, அதை திரும்பத் திரும்பச் சொல்லத் தேவையில்லை. இது ஏமாற்றத்திற்கு வழிவகுக்காத எதிர்காலத்திற்கான சிறந்த நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது.(எபிரெயர் 7:2028, 1பேதுரு 1:3)

பாடத்தை நன்றாகக் கற்றுக்கொள்ளுங்கள்

# ஆசாரியர்கள் இரக்கத்தையும் அன்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்



— Tom Gilbert

"தேவனுடைய அன்பிலே உங்களைக்காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள்." (யூதா 21)

சபைக்கு அவர் எழுதிய முதல் நிரூபத்தில், "தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களுக்கு" (1பேதுரு 1:1) "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்."மேலும், "நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும் இராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும்..." (1பேதுரு2:5, 9) எபிரெயரில், இயேசு "பிரதான ஆசாரியர்" என்று மீண்டும் மீண்டும் விவரிக்கப்படுகிறார்.



பிரதான ஆசாரியராக இயேசுவின் தலைமையின் கீழ், ஆசாரியர்களின் பங்கை சபை நிறைவேற்ற வேண்டுமானால், இஸ்ரயேல் தேசத்துக்கான நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் கடவுளால் நிறுவப்பட்ட ஆசாரியத்துவத்தின் பணியையும் அதன் குணநலன்களையும் கருத்தில் கொள்வது பொருத்தமானது. இது ஒரு ஆசாரியர் தனது பணியில் திறம்பட செயல்படச்செய்கிறது.

கூடாரம் அல்லது ஆலயம் தொடர்பான ஆசாரிய செயல்பாடுகளை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். ஜனங்கள் கொண்டு வரும் பலிகளைப் பெறுதல் மற்றும் வழங்குதல், தினசரி காலை மற்றும் மாலை தகன பலிகள், மற்றும் பாவநிவாரண நாள் போன்ற புனித நாட்களுடன் தொடர்புடைய சேவைகள் மற்றும் காணிக்கைகள் ஆகியவை இதில் அடங்கும். குறிப்பாக அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு வந்து குடியேறிய பிறகு, மற்ற ஆசாரியர்களின் செயல்பாடுகளைக் குறித்து நாம் பழக்கம் இல்லாதவர்களாக இருக்கலாம்.அவர்கள் வாழ்ந்த சமூகங்களில் அவர்களுக்கு கடமைகள் இருந்தன - சமூகத்தின் மக்களுடனும், மற்றும் அவர்களின் வாழ்க்கை விவகாரங்களைப் பற்றி தொடர்பு கொள்ளவேண்டிய கடமைகள் இருந்தது.

### ஆசாரியத்துவத்தின் கடமை

● ஜனங்களுக்கு கடவுளின் சட்டங்களை கற்பிப்பதற்கும் விளக்குவதற்கும் ஆசாரியர் பொறுப்புப் பெற்றிருந்தனர். (உபாகமம் 33:10, 2நாளாகமம் 17:7-9, மல்கியா 2:6-7)பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் திரும்பியதும், மற்ற ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களின் உதவியோடு ஆசாரியராகிய எஸ்றா, தண்ணீர் வாயிலுக்கு முன்பாக ஜனங்களைக் கூட்டி, அதிகாலை முதல் மதியம் வரை, அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தைப் படித்து விளக்கினார். (நெகேமியா8:1-8)

● நீதி நிர்வகிப்பதில் ஆசாரியர்கள் பங்கு வகித்தனர். அவர்கள் உள்ளூர் நீதிபதிகளுக்கு உதவக் கூடியவர்களாகவும், கடினமாக

வழக்குகளைத் தீர்ப்பதில் ஈடுபட்டு வந்தனர். (உபாகமம் 17:8-9)

● சந்தேகத்திற்கிடமான விபச்சாரம் காரணமாக கணவன் மனைவி மீது சந்தேகம் கொண்ட ஒரு பெண்ணை, குற்றமற்றவள் அல்லது குற்றமுள்ளவள் என்பதை தீர்மானிக்க சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட சடங்குகளை ஆசாரியர்கள் நடத்தினர். (எண்ணாகமம் 5:11-31).இவையும் பிற கடமைகளும் ஆசாரியர் வாழ்ந்த சமூகத்தில் உள்ள மக்களிடையே மேற்கொள்ளப்பட்டன.சமூகத்தில் ஒரு தலைவராக, ஆசாரியர் ஜனங்களுடன் உறவுகளை ஏற்படுத்தி, அவர்களை நேசிப்பவராக இருக்கவேண்டும். அவர் சமூகத்தில் ஒரு தலைவராக இருந்தாலும்,அவர் தனது சமூகத்தில் பணியாற்றிய மற்றவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திப் பார்க்காத மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும். இது எபிரெயர் 5:2,3ல் விவரிக்கப்பட்டுள்ள இராஜரீக ஆசாரியத்துவம். இதில் நமக்கு மனத்தாழ்மை பற்றிய ஆழமான பாடம் அடங்கியுள்ளது.

"தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான். அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிடவேண்டியது போல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாயிருக்கிறது." தெய்வீக இரக்கம் மற்றும் பாவ மன்னிப்புக்கான தனது சொந்த தேவையை உணர்ந்து கொள்ளும் போது, ஒரு ஆசாரியர் நியாயப்பிரமாணத்தின் கீழ் அறிவுறுத்தல் அல்லது திருத்தம் தேவைப்படுபவர்களுடன் இரக்கத்துடன் செயல்படுவார். கிறிஸ்துவின் இராஜ்யத்தில் மனுக்குலத்திற்கு சேவை செய்யும் இராஜரீக ஆசாரியத்துவமும் இப்படியாகவே இருக்கவேண்டும். மத்தேயு 5:7ல் இயேசு இந்தக் கொள்கையை வலியுறுத்தினார். "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள்."

**கருணை ஒரு நேர்மறையான செயல்**

கருணை என்பது உணர்வை விட மேலானது. தேவைப்படும் ஒருவரின் அவலநிலைக்கு அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஆதாரங்களைக் கொண்ட ஒருவரால் இது பதிலளிப்பதாகும்.

வேதாகமத்தில், கருணை என்பது சில சமயங்களில் அனுதாபம் அல்லது இரக்கத்தால் தூண்டப்பட்ட தவறுக்கான விளைவுகள் அல்லது தண்டனையைத் தடுத்து நிறுத்துவதுடன் தொடர்புடையது. கடவுள் தனது இரக்கத்தின் காரணமாக விளைவுகளைத் தடுத்து நிறுத்தியதற்கான பதிவுகளுக்கு சங்கீதம் *103:8-11*, தானியேல் 9:8-9, மற்றும் மீகா 7:18-19 ஆகியவற்றைப் பார்க்கலாம். இருப்பினும், அத்தகைய விளைவுகளைத் தடுப்பது கருணையின் முதன்மையான பொருள் அல்ல.

கருணை என்பது ஒரு நேர்மறையான செயலாக, நலிவடைந்த மற்றும் இரக்கமுள்ள செயல் தேவைப்படுபவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் அல்லது இரக்கத்தின் வெளிப்பாடாகும்.இது நல்ல சமாரியன் உவமையில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. (லூக்கா 10:30-37) இரண்டு பெரிய கட்டளைகளைப் பற்றி ஒரு வழக்கறிஞருடன் பேசும் போது நம் ஆண்டவர் இந்த உவமையைக் கூறினார். உங்கள் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும், மனதோடும் கடவுளை நேசிப்பது, உங்களைப் போலவே உங்கள் அண்ட வீட்டாரையும் நேசிப்பது. வழக்கறிஞர், "என் பக்கத்து வீட்டுக்காரர் யார்?" என்று கேட்டார்.

அன்புக்கும் கருணைக்கும் இடையே நேரடியான தொடர்பை வரைந்து, இந்த உவமையின் மூலம் இயேசு தனது கேள்விக்கு பதிலளித்தார். சமாரியன் எருசலேமுக்கும் எரிகோவுக்கும் இடையேயான சாலையில் பயணித்துக் கொண்டிருந்தபோது, கொள்ளையடிக்கப்பட்டு, அடிக்கப்பட்டு இறந்து கொண்டிருக்கும் ஒரு மனிதனைக் கண்டார். சமாரியன் அவரது காயங்களுக்குக் கட்டுப் போட்டு, அவரை ஒரு

விடுதிக்கு அழைத்துச் சென்று, சத்திரக்காரரிடம் பணத்தை கொடுத்து விட்டு, அவர் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.சமாரியன் தாக்கப்பட்ட மனிதனின் உதவிக்கான திறனும் வளமும் பெற்றிருந்தான்."நீயும் அப்படியே செய்" என்று இயேசு கூறினார்.

## அன்பு செய்வது போல அன்புள்ளது

கருணையைப் போலவே, அன்பும் ஒரு உணர்வை விட மேலானது. "அன்பை அது தூண்டும் செயல்களிலிருந்து மட்டுமே அறிய முடியும். "1 மற்றவர்களை நேர்மறையாக மதிப்பது என்பது ஒரு உணர்வான முடிவு - அவர்களிடம் அன்பாக நடந்து கொள்ளுங்கள், அவர்களுக்கு நல்லது செய்யுங்கள், அவர்கள் யார் என்பதை மதிப்பிடுங்கள். 1கொரிந்தியர் 13:4-8 ல் அகாபே அன்பின் பல பண்புகளை பவுல் விவரிக்கிறார். அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை, அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஒய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்."

அன்பும் கருணையும் கடவுளின் குணாதிசங்களின் உள்ளார்ந்த குணங்கள். "தேவன் அன்பாகவே இருக்கிறார்."(1யோவான் 4:16) "கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர், அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலுமுள்ளது." (சங்கீதம் 145:8-9)குறிப்பாக அவரைத் தேடி அவருக்குக் கீழ்ப்படிய முயற்சிப்பவர்கள் மீது கடவுள் தம்முடைய அன்பைக் காண்பிக்கும் முதன்மையான வழிகளில் ஒன்று கருணை.

பொதுவான மனுக்குலத்தின் மீது கடவுளின் கருணையும் அன்பும் சமரசம் மற்றும் மறுசீரமைப்பும் -பாவம், நோய் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து அவர்களை மீட்கும் அவரது பெரிய திட்டத்தில் காட்டப்படுகின்றன. தனிப்பட்டவர்களிடம் கடவுளுடைய இரக்கமும் அன்பும் அவருடைய பொறுமையிலும் நீடிய பொறுமையிலும் வெளிப்படுகிறது, அவர்கள் மனந்திரும்பி தவறான போக்கைத் திருத்திக்கொள்ள அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது.



கடவுள் நம் தேவைகளைப் பார்க்கிறார், அவருடைய அன்பின் காரணமாக அவர் கருணையுடன் பதிலளிக்கிறார்.

யோவானின் சுவிசேஷத்தின் முதல் வசனத்திலிருந்து இயேசு தம் தந்தையைப் போன்றவர் என்பதை நாம் அறிவோம். ஆகவே, கடவுளின் அன்பும் கருணையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் முழுமையாக பிரதிபலிக்கிறது. "நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற" (எபிரெயர் 3:1-2)

"அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும்

தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுப்பட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்." (எபிரெயர் 2:17-18)

கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆசாரியர்களாக சேவை செய்யும் பாக்கியத்தை எதிர்பார்க்கிறவர்கள் இதே அன்பையும் இரக்கத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அவை நம் குணத்தின் உள்ளார்ந்த குணங்களாக மாற வேண்டும். லேவிய ஆசாரியர்களின் வேலையைப் போலவே, இராஜரீக ஆசாரியத்துவம் கடவுளின் சட்டங்களைக் கற்பிப்பதிலும், தனிநபர்கள், நாடுகள் மற்றும் ஜனங்களிடையே நல்லிணக்கத்தைக் கொண்டுவருவதிலும் ஈடுபடும். பேராசை, சுரண்டல், வன்முறை மற்றும் இனம், தோல், நிறம், மதம் அரசியல் தொடர்பு மற்றும் பிற வேறுபாடுகள் ஆகியவற்றின் மீதான தப்பெண்ணங்கள் காரணமாக ஒருவரையொருவர் எதிரிகளாகக் கருதியவர்கள். தங்கள் குணாதிசயங்களுக்குள் வளர்த்தெடுக்கப்பட்ட அன்பும் கருணையும் காரணமாக, இராஜரீகமான ஆசாரியத்துவத்தில் இருப்பவர்கள் "அறியாமை மற்றும் வழிகெட்டவர்களிடம் மென்மையாக நடந்துகொள்வார்கள்" மேலும் அவர்களுக்கு சமாதானம், மனநிறைவு, மகிழ்ச்சி மற்றும் நித்திய வாழ்வில் விளையும் புதிய திசையைக் கொடுக்க முடியும்.

இவை அனைத்தும் இயேசு கிறிஸ்து மற்றும் அவருடைய இராஜரீக ஆசாரியத்துவமான "இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியரின்" தலைமைத்துவத்தின் மூலம் நிறைவேற்றப்படும். ஆயிரமாண்டு யுகத்தின் ஆசாரியர்கள், பின் தங்கியவர்களுக்கும், இரக்கமுள்ள நடவடிக்கை தேவைப்படுபவர்களுக்கும் நிவாரணம் அளிக்க முடியும், ஏனென்றால் தெய்வீக ஆவிக்குரிய மனிதர்களாக, அவர்களுக்கு எல்லையற்ற வளங்கள் கிடைக்கும்.

**நம்முடைய தற்போதைய இலக்கு**

கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆசாரியர்களாக நம்மைப் பயனுள்ளதாக்கும் கிறிஸ்தவ குணத்தின் அன்பு, இரக்கம், பரிவு மற்றும் பிற அம்சங்களை வளர்ப்பதே தற்போதைய காலத்தில் நம் வாழ்வின் குறிக்கோள். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."(யோவான் 3:16)

அதேபோல், இயேசு உலகை மிகவும் நேசித்தார், அவர் மனுக்குலத்தை பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் காப்பாற்ற மனமுவந்து தன் உயிரைக் கொடுத்தார். இராஜரீக ஆசாரியத்துவத்தின் ஒரு பகுதியாக இருக்க விரும்புவோர், மனுக்குலத்தின் மீது அனைத்தையும் உள்ளடக்கிய அதே அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். இராஜரீக ஆசாரியத்துவத்தின் ஒரு பகுதியாக மாறுவதற்கு தேர்ந்தெடுத்தற்குரிய அன்பு போதாது.

"தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன், தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான் ? தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்கிற இந்த கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்" (1யோவான் 4:20-21).

எபேசியர்களுக்கும் தீத்துவுக்கும் எழுதிய கடிதங்களில், அப்போஸ்தலனாகிய பவுல், கடவுளின் அன்பும் கருணையும் சேர்ந்து நம்மையும், இறுதியில் முழு உலகத்தையும் ஆசீர்வதிப்பதற்காக ஒன்றாகச் செயல்படுவதை அழகாக விவரிக்கிறார். "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே



இரட்சிக்கப்பட்டீர்கள்." (எபேசியர் 2:4-5)

"நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, அவர் தமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்."(தீத்து 3:4-7)

இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாகிய நாம், கடவுள் மற்றும் அவருடைய குமாரனின் குணத்தில் உள்ள அன்பையும் இரக்கத்தையும் வளர்ப்பதில் விடாமுயற்சியுடன் இருப்போம்.இது நம்மில் வாழும் கிறிஸ்து என்று பவுலும் யோவானும் விவரிக்கிறார்கள்."கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன், ஆயினும்,பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார், நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்." (கலாத்தியர் 2:20 ) "ஏனெனில் இவ்வுலகில் நம் வாழ்வு உண்மையில் நம்மில் வாழும் அவருடைய (கிறிஸ்துவின்) வாழ்க்கை என்பதை நாம் உணர்கிறோம்." (1யோவான் 4:17) கிறிஸ்து நம்மில் வாழ முயற்சிப்போம்.



## ஆசீர்வதிக்கப்படுவதற்கு நன்மை செய்யுங்கள்

# ஜனங்களை ஆசீர்வதிக்கும் ஆசாரியத்துவம்

"ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும்." (எபிரெயர் 7:12)

ஆசாரியர்களுக்கு இரண்டு கடமைகள் உள்ளது - முதலில், பலி செலுத்துவது, பின்னர் மற்றவர்களை ஆசீர்வதிப்பது. எதிர்கால ஆசாரியத்துவம் இந்த யுகத்தில் இப்போது தன்னையே பலி செலுத்துகிறது."பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்" (சங்கீதம் 50:5)உலக ஜனங்கள் உயிர்த்தெழுப்பப்படும்போது, மரணம் வரை கிறிஸ்துவுக்குள் உண்மையாக இருந்தவர்களை அவர்கள் நன்றாக நினைவுகூருவார்கள்.

"சீயோனைக்குறித்து, இன்னான் இன்னான் அதிலே பிறந்தானென்றும் சொல்லப்படும், உன்னதமானவர் தாமே அதை ஸ்திரப்படுத்துவார். கர்த்தர் ஜனங்களைப் பேரேழுதும் போது, இன்னான் அதிலே பிறந்தான் என்று அவர்களைத் தொகையிடுவார்." (சங்கீதம் 87:5, 6). இவர்களின் எண்ணிக்கை 144,000. (வெளிப்படுத்தல் 7:4)

### சென்றது (வேறு இடங்களுக்கு) ஆனால் மறக்கப்படவில்லை

ஒன்றை நினைவு கூரலாம் - "அவர் ஆரம்பத்திலிருந்தே நல்ல பையன்.எஞ்சியவர்கள் அவரை மிகவும் நல்ல பையன் என்று கேலி செய்தோம், ஆனால் உண்மையில் நாங்கள் அமைதியாக அவரை மதித்தோம். மேலும் அவர் வயதாகும்போது அவர் மேம்பட்டார். மற்றொன்றில், நான் அவரை இளைஞனாக அறிந்தேன். அவர் பிரச்சனை செய்பவராக இருந்தார்.ஆனால் அவர் வளர்ந்த பிறகு, ஒரு கட்டத்தில் திடீரென்று "மதம்" அல்லது ஏதோ ஒன்று அவரை மாற்றியது, அவர் தன்னைத் தானே மாற்றிக் கொண்டார். (இனி அவரை எங்கள் கூட்டத்தில் இருப்பதற்கு நாங்கள் விரும்பவில்லை.) அவர் எங்களிடம் பைபிளைப் பற்றியும் சுத்தமான வாழ்க்கையைப் பற்றியும் பேச முயன்றார், ஆனால் நாங்கள் அதற்குத் தயாராக இல்லை.நான் மரணத்திலிருந்து விழித்தபோது, என்னை முழுமையாக மாற்றிக்கொள்ள முடியாது என்று நினைத்தேன், ஆனால் அவர் இருந்த நிலையில் இருந்து மாற முடியும் என்றால், என்னாலும் என்னை மாற்றிக் கொள்ள முடியும் என்று பின்னர் நான் நினைத்தேன்.



ஒருவேளை மற்றொருவர், அவர்கள் எப்போதும் ஒரு நல்ல குடும்பமாக இருந்தனர். அப்போது அவர்களை சோகம் தாக்கியது, தந்தை இறந்தார், தாய் ஊனமுற்றார். மூத்த இளைஞன் தன்னால் முடிந்தவரை தொழிலை நிர்வகித்தார், அடுத்த பெரியவர் தனது வாழ்நாள் முழுவதும் தங்கள் தாயை கவனித்துக் கொண்டார். அவர்கள் நட்சத்திர விளையாட்டு வீரர்களாக இருக்கவில்லை, ஆனால் எங்கள் விளையாட்டுகள் மற்றும் விருந்துகளில் அவர்களை நாங்கள் தவறவிட்டோம். அவர்களின் சகோதரிகள் சிறியவர்களாக இருந்தாலும்

அவர்களும் தங்களால் இயன்றவரை உதவி செய்தனர். அவர்கள் அனைவரின் நினைவும் இங்கு உயிர்த்தெழுதலில் எனக்கு ஊக்கமளிக்கிறது. நாம் அமைக்கும் முன்மாதிரியே நமது சிறந்த போதனை.

## ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருங்கள், அல்லது தங்களை அசீர்வதிக்க வேண்டுமா?

ஆபிரகாமுக்கு கடவுள் கொடுத்த முதல் வாக்குறுதியில் அடங்கும்.- "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்." (ஆதியாகமம் 12:2-3 ) ஆபிரகாம் தன் மகனையும் வாரிசையும் கூட பலிச் செலுத்த தயாராக இருந்தபோது, கடவுள் தம்முடைய வாக்குறுதியோடு கூடுதலாகவாக்களித்தார். "நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."(ஆதியாகமம் 22:18)1. கிறிஸ்து மற்றும் விசுவாசமான சபையின் எதிர்கால வேலையின் ஒரு பகுதி ஜனங்களை ஆசீர்வதிப்பதும், பின்னர் ஒருவரையொருவர் ஆசீர்வதிக்க ஜனங்களுக்கு கற்பிப்பதும் ஆகும்.

உயிர்த்தெழும் ஜனங்களுக்கு இயேசு நித்திய ஜீவனை கொடுப்பதினால் அவர் அவர்களுக்கு "நித்திய பிதாவாக" இருப்பார். (ஏசாயா9:6) அவருடைய மணவாட்டி, விசுவாசமுள்ள சபை, ஜனங்களை உயிர்த்தெழுப்புவதில் ஒரு பங்கைக் கொண்டிருப்பார்கள். "உன் தொண்டை, என் நேசர் குடிக்கையில் மெதுவாயிறங்குகிறதும், உறங்குகிறவர்களின் உதடுகளைப்பேசப் பண்ணுகிறதுமான, நல்ல திராட்சரசத்தைப் போலிருக்கிறது."(உன்னதப்பாட்டு7:9) என்று தீர்க்கதரிசனமாக இயேசு தம் மணவாட்டியைப் பற்றி கூறுகிறார்.

கடவுள் தனது அன்பை மற்ற உயிரினங்களை உருவாக்குவதன் மூலம் மட்டுமே வெளிப்படுத்த முடியும்.மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் நாம் நேசிக்க கற்றுக் கொள்கிறோம்.கடவுள் முதலில் இயேசுவிடம் தம் அன்பைக் காட்டினார், பின்னர் அவர்கள் இருவரும் உண்மையுள்ள சபை ஜனங்களிடம் காட்டினார். பின்னர் அவர்கள் ஒன்றாக திரளான ஜனங்கள் மீதும், பின்னர் உண்மையுள்ள முற்பிதாக்கள் (ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு, யோசேப்பு, மோசே, தாவீது, தானியேல், யோவான் ஸ்நானகள் மற்றும் பவுல்) மீதும் அன்பு காட்டுவார்கள். அப்போது அனைவரும் பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதில் ஈடுபடுவார்கள்.இறுதியாக, எல்லா ஜனங்களும் ஒருவரையொருவர் (சாபம் இல்லாமல்) ஆசீர்வதிக்கக் கற்றுக் கொள்வார்கள். இறுதியாக, அனைவரும் "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்பதை அடையாளம் காண்பார்கள். (1யோவான்4:8 )

நன்றியுள்ளவர்கள் அடிப்படையில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். நன்றி கெட்டவர்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. ஒருவர் மகிழ்ச்சி யடையாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும், மற்றவர்களையும் இதேபோல் மகிழ்ச்சியற்றவர்களாக ஆக்க வேண்டும் என்ற நவீன மனப்பான்மை உலகில் உள்ளது. வெறுப்பின் ஆவி துக்கத்திற்கு வழிவகுக்கிறது. ஆபேல் தனது வாழ்க்கைக்காக கடவுளுக்கு தனது நன்றியை வெளிப்படுத்தினார், மேலும் தனது மந்தையின் முதல் குட்டிகளை காணிக்கையாக கொண்டு வந்தார்."ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்." (ஆதியாகமம் 4:4)நோவா தனது முழு குடும்பத்திற்கும் உயிரைக் காப்பாற்றியதற்காக நன்றி தெரிவித்தார், அதற்காக அவர்களைக் காப்பாற்றிய கடவுளுக்குப் பலிபீடத்தைக் கட்டினார். (ஆதியாகமம் 8:20-22)தாவீது இராஜாவும் பல சங்கீதங்களை எழுதி தனது நன்றியை வெளிப்படுத்தினார். இயேசு பல முறை செய்ததைப் போல தாவீது ஜெபத்தின் மூலம் நன்றி கூறினார் (தானியேல் 2:23) மகிழ்ச்சியானவர்கள் ஒருபோதும் துக்கப்படுவதில்லை என்று நினைக்கக்கூடாது.

லாசருக்காக துக்கப்படுபவர்களில் இயேசுவும் ஒருவர். "இயேசு கண்ணீர் விட்டார்".(யோவான் 11:35)."நீங்கள் நன்மையை பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்? நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள், அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து -" (1பேதுரு 3:13-14)உங்களை உயிர்த்தெழுதலில் இருந்து விலக்கி வைக்க யாராலும் எதுவும் செய்ய முடியாது.

இயேசு "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு" (எபிரெயர் 2:9)அதனால் நீங்களும் மற்ற அனைவரும் பயனடைவீர்கள். அனைவருக்கும் ஒரு முழுமையான வாய்ப்பு கிடைக்கும்(இப்போது அல்லது கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு இராஜ்யத்தில்) அனைவரும் நம் கடவுளைப் புகழ்வதற்கு முழு காரணமும் வாய்ப்பும் இருக்கும்.

பைபிள் சொல்வது போல் தாங்கள் செய்ய முயற்சிப்பதாக பலர் வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் செய்யாவிட்டால் விளைவுகளை எண்ணி பயப்படுகிறார்கள், குறிப்பாக நித்திய விளைவுகளைப் பற்றி. ஆனால் நாம் அவருக்குப் பயப்பட வேண்டும் என்று நம் கடவுள் விரும்புகிறாரா அல்லது நமக்காகவும் அனைவருக்கும் அவர் செய்த மற்றும் செய்யவிருக்கும் அனைத்திற்கும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டுமா? "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியை கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்."(2தீமோத்தேயு1:7)

நாம் அவருக்கு பயப்பட வேண்டும் என்று நம் கடவுள் விரும்புகிறாரா ? அல்லது முழு மனதுடன் அவரை நேசிக்கவேண்டும் என்று விரும்புகிறாரா? கிறிஸ்துவின் இராஜ்யத்தின் போது நாம் எந்த மனநிலையை உலகிற்கு கற்பிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார் ? பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் எது பெரிய ஆசீர்வாதமாக இருக்கும்?

## நோக்கம்

யெகோவா தேவனின் நாமத்தினாலே ஆசீர்வதிக்க கடவுள் ஆசாரியர்களைத் தேர்ந்தெடுத்தார். (உபாகமம் 21:5) ஆசாரியத்துவம் ஏழு நாட்களில் பரிசுத்தப்படுத்தப்பட்டது. எட்டாம் நாள், பலியிடுதல் முடிந்ததும், ஆரோன் ஜனங்களை ஆசீர்வதித்தார். பின்பு "மோசேயும் ஆரோனும் சந்திப்புக் கூடாரத்திற்குள் பிரவேசித்து, வெளியே வந்து, ஜனங்களை ஆசீர்வதித்தார்கள். பின்பு, மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்கூடாரத்துக்குள் பிரவேசித்து, வெளியே வந்து, ஜனங்களை ஆசீர்வதித்தார்கள். (லேவியராகமம் 9:22-23)இது கிறிஸ்து தனது ஆயிரம் வருட இராஜ்யத்தில் ஜனங்களை முதலில் ஆசீர்வதிப்பதை மாதிரியாகக் காட்டுகிறது, பின்னர் கடவுளும் கிறிஸ்துவும் சாத்தானின் கொஞ்ச காலத்திற்கு உலகிற்கு அதன் இறுதிப் பரீட்சையை வழங்குவதற்காக விலகியிருப்பார்கள். கடவுளும் கிறிஸ்துவும் எல்லா ஜனங்களையும் என்றென்றும் ஆசீர்வதிப்பார்கள். (வெளிப்படுத்துதல்21:1-3)

## இலக்கு

"அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்." (சங்கீதம் 119:2)அனைவரும் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போவதினால் என்ன நடக்கும் என்ற பயத்தோடு அல்ல, அவர்கள் முழு விருப்பத்தோடு வாஞ்சையோடும் யெகோவா தேவனுக்குக் கீழ்ப்படிவார்கள். இதுவே முழு தெய்வீகத் திட்டத்தின் இறுதி இலக்காகும்.

## ஆலயத்திலும் சிங்காசனத்திற்கு முன்பும்

# திரள் கூட்டம் கூட ஊழியம் செய்கிறது



"ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்" (வெளிப்படுத்தல் 7:9).

— James Parkinson

கிறிஸ்துவின் மணவாட்டியாகிய 1,44000 பேர் முதலில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஒரு பெரிய திரளான கூட்டமும் உள்ளனது, அவர்களும் ஊழியம் செய்வார்கள். பழைய ஏற்பாட்டில் உள்ள லேவியரகளுக்கும் (மற்றொரு ஆவிக்குரிய கூட்டம் ) மற்றும் வெளிப்படுத்தலில் உள்ள திரளான கூட்டம் ஆகியவற்றுக்கு இடையே பொதுவாக எழுதப்பட்ட விஷயங்களை வாசகர் காணலாம்.

| பழைய ஏற்பாடு முதல் 1வது அட்வெண்ட் (RVIC)<br>Old Testament to 1st Advent (RVIC) | வெளிப்பாடு (RVIC).<br>Revelation (RVIC) |
|---|---|
| லேவி கோத்திரத்தை மட்டும் எண்ணவேண்டாம், இஸ்ரயேல் புத்திரருக்குள்ளே அவர்கள் தொகையை எடுத்துக்கொள்ளவும் வேண்டாம். (எண்ணாகமம் 1:49). | "சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்.."(வெளிப்படுத்துதல் 7:9) |
| இஸ்ரயேல் புத்திரரிலிருந்து ஆரோனுக்கும் அவனுடைய குமாரருக்கும் நான் லேவியர்களை அன்பளிப்பாகக் கொடுத்தேன்.(எண்ணாகமம் 8:19) | வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு - இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். (வெளிப்படுத்தல் 7:9-10). |
| "மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு..அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு, ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரயேலின் இராஜா ஸ்தோத்திரிக்கப் பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்." (யோவான் 12:12-13 வெளிப்படுத்துதல் 19:1ம் காண்க) "... | ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன் - இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள், இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். (வெளிப்படுத்துதல் 7:14) |
| லேவியரைப் பிரித்தெடுத்து, ...தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, தங்களைச் சுத்திகரிக்கக்கடவர்கள். (எண்ணாகமம் 8:6-7, 21) | ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும், பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். " (வெளிப்படுத்துதல் 7:15). |
| ஆனால் இஸ்ரயேலர் வழிதவறியபோது என்னைவிட்டு விலகிய லேவியர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள். ஆனாலும் அவர்கள் என் சரணாலயத்தில் ஊழியக்காரரர்களாக இருப்பார்கள்.(எசேக்கியேல் 44:10-11)" | "இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை, வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத் தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார், தேவன் தாமே இவர்களுடைய கண்ணீரியாவையும் துடைப்பார் என்றான். " (வெளிப்படுத்துதல் 7:16-17) |

| | |
|---|---|
| இதோ, இஸ்ரயேலைக் காக்கிறவர் உறங்கவதுமில்லை தூங்குகிறதுமில்லை. பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை." (சங்கீதம் 121:4, 6) | "இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை, வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத் தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார், தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார் என்றான். " (வெளிப்படுத்துதல் 7:16-17) |
| ஆனால் லேவியர்களுக்கு... இஸ்ரயேல் புத்திரருக்குள்ளே அவர்களுக்குச் சுதந்தரம் இருக்காது. (எண்ணாகமம் 18:23) | இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன்." (வெளிப்படுத்துதல் 19:1) |

ஆசாரியர் அல்லாத லேவியர்கள் வெளிப்படுத்தலில் உள்ள திரள் கூட்டத்தாரை அடையாளப்படுத்துகிறார்கள் என்பதை பல வேத வசனங்கள் பொருள்படுத்துவதை தெளிவாக காண்பிக்கிறது.

## அனுமானங்கள்

ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் தேசத்தில் எந்தச் சுதந்தரமும் கொடுக்கப்படவில்லை. (எண்ணாகமம் 18:20,23) சபை மற்றும் திரள் கூட்டமும் மாம்ச இயல்பைப் பெறுவதில்லை. அவர்களுக்கு பரலோக சுதந்திரம் - ஆவிக்குரிய இயல்புகள் கொடுக்கப்படுகிறது.

ஆசாரியர்கள் முதலில் பிரதிஷ்டைச் செய்யப்பட்டனர். (லேவியாராகமம்8) பின்னர் லேவியர்கள் பிரதிஷ்டைச் செய்யப்பட்டனர் (எண்ணாகமம் 8) மற்றும் சந்திப்புக் கூடாரத்தில் சேவை செய்ய ஆசாரியத்துவத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. (எண்ணாகமம் 8:19)1,44,000 பேர் உயிர்த்தெழுப்பப்பட்டு, நிறைவடைந்தபின், திரளான கூட்டம் எழுப்பப்படும். அதன் பின் கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு இராஜ்யத்தில், வரவிருக்கும் யுகத்தில், மனுக்குலத்திற்கு ஊழியம் செய்யவதற்கான ஆசாரியத்துவம் (இயேசு கிறிஸ்து மற்றும் அவருடைய மணவாட்டி) வழங்கப்படும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. இது வெளிப்படுத்துதல் 7 உடன் ஒத்துப்போகிறது.அங்கு முதலில் 1,44,000 பேரும் பின்னர் பெரும் திரளானவர்களும் விவரிக்கப்படுகிறார்கள்.

ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் இடையிலான உறவு சாலொமோன் ஆலயத்தில் தொடர்கிறது, அங்கு, ஆசாரியத்துவத்தின் 24 முறைகளும் லேவியர்களின் 24 முறைகளும் இருந்தன.(1நாளாகமம்24:3-19, 25:8-31)

அத்துடன் எசேக்கியேலின் ஆலயத்தில் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டது. (எசேக்கியேல் 44)அங்கு, திரளான ஜனங்கள் (லேவியர்களால் குறிக்கப்பட்டவர்கள்) தவறுகளைச் செய்தார்கள்,

சிலைகளுடன் ஜனங்களுக்கு சாட்சி கொடுத்தார்கள் என்று நாம் காண்கிறோம். இருந்தபோதிலும், லேவியர்கள் மனந்திரும்பி, "தங்கள் வஸ்திரங்களைத் துவைக்கிறார்கள்". (எண்ணாகமம் 8:21)மோசேயின் சொந்தப் பேரனான ஒரு லேவியன், முதலில் ஒரு வீட்டுக்கும் பின்னர் ஒரு கோத்திரத்துக்கும் சிலைகளை வைத்து ஆராதனை செய்தான். (நியாயதிபதிகள் 17-18)அந்தச் சிலைகள் "உருக்கப்பட்ட உருவமும் செதுக்கப்பட்ட உருவமுமாக" இருந்தன. குறிப்பிடத்தக்க வகையில், அவை அந்நியக் கடவுள்களைப் அடையாளப்படுத்தும் நோக்கத்துடன் அல்ல, அவன் வெளிப்படையாக யெகோவா தேவனுக்காக இதை செய்தான். (நியாயாதிபதி17:3)இருப்பினும், இது இரண்டாவது கட்டளையை மீறுவதாகும். "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம், நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம், உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்." (யாத்திராகமம்20:4-5)

சுவிசேஷ யுகத்தில் நமக்கு ஒரு தெளிவான



பாடம் உள்ளது. நாம் எந்த நிறுவனத்தையும் (கிறிஸ்தவம் அல்லது கிறிஸ்தவம் அல்ல என்று முத்திரை குத்தப்பட்ட), மதம், அமைப்பு, திருச்சபை, தலைவர் அல்லது மதத்தை கடவுளின் வார்த்தைக்கு மேலே வைக்கக்கூடாது. மற்றவர்கள் இருக்கலாம் ஆனால் நாம் கூடாது. இதுபோன்ற அனைத்தும் (அடையாளம்)நெருப்பால் சோதிக்கப்படும். அப்போது கடவுளுடைய வார்த்தையின் மீது கட்டப்பட்டவை மட்டுமே உயிர்வாழ முடியும். ஒரு அமைப்பு, முதலியன, கடவுளின் வார்த்தையை ஊக்குவிக்க உதவும் வரை (நாயை வால் அசைக்காத வரை) ஆயினும் கூட, ஆயிர வருட உயிர்த்தெழுதல் இராஜ்யத்தில் தப்பிப்பிழைக்கக்கூடிய ஒரு அமைப்பை நாம் நிறுவ முடியாது. தேவனுடைய வார்த்தை என்றென்றும் நிலைத்திருக்கும்.

ஒரு நல்ல தலைவரை நாம் முழுமையாகப் பாராட்ட வேண்டும், ஆனால் அவரை இயேசு கிறிஸ்துவுக்கு சமப்படுத்தக்கூடாது. அவர் தவறு செய்தால், நாம் அவருக்கு எதிராக மாறக்கூடாது, ஒவ்வொருவரும் கடவுளுடைய வார்த்தையைப் பின்பற்ற வேண்டும், அவருடைய மனசாட்சி கடவுளுடைய வார்த்தையில் நன்கு பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

அப்போஸ்தலன் யோவானின் அறிவுரை என்னவெனில், "உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்."(2யோவான் 8)ஆயினும்கூட, ஒரு பகுதி வெகுமதி என்பது பெரும் திரளான ஒவ்வொருவருக்கும் ஒரு பெரிய ஆசீர்வாதமாக இருக்கும். பரலோக சுபாவத்தின் ஒவ்வொரு நிலையும் பூரண மனித இயல்பை விட இன்னும் உயர்ந்ததாக இருக்கும்.(மத்தேயு11:11)

அர்ப்பணிக்கப்பட்ட வழியில் நுழைந்து, இயேசு கிறிஸ்து என்ற ஒரே அஸ்திவாரத்தின் மீது கட்டப்படுபவர்களுக்கு, பவுல் மூன்று சாத்தியமான விளைவுகளைத் தருகிறார். (1கொரிந்தியர் 3:10-17)முழுமையான உண்மையுள்ளவர்கள் இயேசு கிறிஸ்துவைப் போலவே கடவுளின் தெய்வீக தன்மையைப் பெறுகிறார்கள். பயத்தினால் சமரசம் செய்து பின்னர் வருந்துபவர்கள் சிலர், "இரட்சிப்படுவார்கள்" ஆனால் குறைந்த வெகுமதியைப் பெறுவார்கள் - குறைந்த ஆவிக்குரிய நிலை. பரலோக பரிசாகிய பரிசுத்த ஆவியை முதலில் ருசித்த எவரும் இறுதியில் கிறிஸ்துவின் ஆவியை விட்டுவிட்டு சுய திருப்திக்கு திரும்பினால், அவர் உயிர்த்தெழுப்பப்பட மாட்டார் (இரண்டாம் மரணம்)

ஒரு அமைப்பில் முதல் எதிலும் பெரும் முயற்சி செய்பவரை நாம் இகழ்ந்து விடக்கூடாது, சில சமயங்களில் சுய அல்லது பயத்திற்கு அடிபணிந்து, அவர் தனது அபூரண தீர்ப்பை அவர் பொருத்தமாக இருப்பதை கண்டு அதை பயன்படுத்தியிருக்கலாம் என்று நாம் கருத வேண்டும்.ஆனாலும் அவர் வருந்தலாம். கிறிஸ்து போன்ற குணாதிசயங்களை வளர்க்க திரள் கூட்டத்தின் ஒவ்வொருவரும் உண்மையான முயற்சி எடுத்திருப்பார்கள்."ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான், அவனோ இரட்சிக்கப்படுவான், அதுவும் அக்கினியிலகப் பட்டுத் தப்பினதுபோலிருக்கும்." (1கொரிந்தியர் 3:15)"என் ஆலயத்தில் ஊழியஞ்செய்து, என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள். (எசேக்கியேல் 44:11)

### அவரது சிங்காசனத்தில் ஒரு ஆசாரியர் (முதல்)

# மெல்கிசேதேக்கு, ஆசாரியர் மற்றும் இராஜா


— Jim Moss

"இந்த மெல்கிசேதேக்கு சாலோமின் இராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்,." (எபிரெயர் 7:1)

சுமார் நான்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஊர் என்ற மூன்றாம் வம்சத்தின் சுமேரிய மன்னர், ஊர் நம்மு, தேரா மற்றும் குடும்பத்தினர் உட்பட தனது குடிமக்கள் சிலரை அவர் (மற்றும் அவரது மூன்று கூட்டாளிகள்) கைப்பற்றிய மேற்குப் பகுதிக்கு அனுப்பியதாகத் தெரிகிறது. ஆக்கிரமிப்புப் படையா அல்லது வணிகப் பதவியா என்பது குறிப்பிடப்படவில்லை. முந்தையது அதிக வாய்ப்புள்ளது, ஆபிராமுக்கு பின்னர் 318 "பயிற்சி பெற்றவர்கள்" இருந்தனர். (ஆதியாகமம் 14:14)

பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, தேராவின் குமாரன், ஆபிராம் (பின்னர் ஆபிரகாம் ) தனது மருமகனை கிழக்குப் படையின் மறுசீரமைப்பிலிருந்து மீட்க வேண்டியிருந்தது. (1) முதல் போரில் வடக்கில் கிழக்குப் படைகள் ஊர் நம்மு (அம்ராபேல்) தலைமையில் நடந்தது. ஆனால் யோர்தான் பள்ளத்தாக்கில் பின்னர் மீண்டும் கைப்பற்றப்பட்ட எலாமைட் மன்னன் கெடோர் லாகோமர் தலைமை நடந்தது. ஒவ்வொரு அரசரும் எந்தெந்த பிரதேசங்களை ஆக்கிரமித்திருந்தார்கள் என்பதை இது குறிக்கிறது.ஊர் - நம்மு தனது நான்காவது ஆண்டில் மேறகத்தை கைப்பற்றியதாகக் கூறுகிறார், மேலும் அவர் தனது பதினெட்டாவது வயதில் கொல்லப்படுகிறார், இது ஆதியாகமம் 14 க்கு இணங்குகிறது.} ஆபிராம் திடீர் தாக்குதல் நடத்தினார், மேலும் மன்னர் ஊர் நம்மு (அம்ராபெல் ) கூட கிழக்குப் படைகள் முறியடிக்கப்பட்டன, நொறுக்கப்பட்ட கப்பல் போல போர்க்களத்தில் கைவிடப்பட்டது{Samuel Noah Kramer, The Sumerians, U. Chicago Press, 1963. page 130.}

சாலேமின் இராஜாவும் ஆசாரியருமான மெல்கிசேதேக்கு, வெற்றி பெற்ற ஆபிராமுக்கு நன்றியுள்ளவராக இருந்தார், மேலும் அவரை வாழ்த்துவதற்காக "அப்பமும் திராட்சரசமும்" கொண்டு வந்தார். (கிறிஸ்தவ நினைவு சின்னங்களின் வேதாகமத்தின் முதல் குறிப்பு இதுவாகும்). மேலும் அவருக்கு லேவியின் முன்னோடியான ஆபிராம், போரில் தசமபாகம் செலுத்தினார்.மெல்கிசேதேக் என்றால் "நீதியின் இராஜா" என்று பொருள். அவர் "சமாதானத்தின் இராஜா"என்பதால் அவர் சாலேமின் இராஜாவாக இருந்தார். இரண்டு பெயர்களும் இயேசு கிறிஸ்துவுக்கு பொருந்தக்கூடியதாக இருந்தது. மெல்கிசேதேக்கு யார் ?"இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன், இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான். " என்று எபிரெயர் 7:3 கூறுகிறது. அவர் மனிதன் அல்லாதவரா ? இல்லை. (எபிரெயர்களால் புரிந்து கொள்ள முடியும், ஆனால் ஐரோப்பிய மொழிகளைப் பேசுபவர்களுக்கு இது கடினம்.)

இருபதாம் நூற்றாண்டு புதிய ஏற்பாட்டில், (TCNT) "அவரது தாய் தந்தையின் அல்லது பாரம்பரியத்தின் பதிவு இல்லாதவர். அவருடைய ஆரம்ப நாட்கள் அல்லது முடிவு நாட்களைப் பற்றி பதிவு இல்லாதவர் " என்று கூறுகிறது.{At least twenty other translations virtually agree, including: Complete Jewish Bible (CJB), New European Version (NEV), TEV, 2001 — An American English Bible, Translator's New Testament (TNT), Ferrar Fenton, Simple English Bible (SEB), The Voice, Amplified, Barclay, God's Word, New Living Translation (NLT), New Centur

y Version (NCV), Christian Community Bible, RVIC, while Lamsa (from Aramaic) is close.}மெல்கிசேதேக் ஒரு எலாமைட் (ஷேமிலிருந்து) அல்லது கானானியராக இருந்தாலும், நிஜ வாழ்க்கை மனிதராக இருந்தார். ஏலாமை வென்றதற்காக ஆபிராமுக்கு நன்றியுடன் இருப்பது, அவர் ஒரு எலாமைட் அல்ல என்பதைக் குறிக்கிறது. இருப்பினும், அவர் தனித்துவமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. மெல்கிசேதேக்கு, கிறிஸ்துவுக்கு ஒரு நிழல்

"நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம் மாறாமலுமிருப்பார்." (சங்கீதம் 110:4)என்றும் "உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்து.." (ஆதியாகமம் 14:18)என்றும் தீர்க்கதரிசனமாக உரைக்கப் பட்டது. இது ஆமோஸ் 3:12ம் வசனத்தை மீற வில்லை. "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன்..." ஏனெனில் மெல்கிசேதேக், இஸ்ரயேலின் ஆசாரியர் மற்றும் இஸ்ரயேல் கோத்திரத்தின் இராஜா, யாக்கோபு / இஸ்ரயேலுக்கு இரண்டு தலைமுறைகளுக்கு முன் இருந்தார்.} அவரது ஆசாரியத்துவத்திற்கு முன்னோடி அல்லது வாரிசு பற்றிய பதிவு இல்லை. அவர் ஆபிராம் /ஆபிரகாமை விட உயர்ந்த பதவியில் இருந்தார், எனவே ஆபிராமின் வழிவந்த லேவியர் ஆசாரியத்துவத்தை விடவும் இவர் உயர்வானவர்.(எபிரெயர் 5:56, 6:20, 7:121)

இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவத் திற்கும் பெற்றொர் இல்லை, அவருக்குப் பிறகு இன்னொருவர் இருக்கவும் மாட்டார், ஏனென்றால் அவர் "நித்தியத்திற்கும் ஒரு ஆசாரியராக" இருக்கிறார். அவருடைய புதிய ஆசாரியத்துவம், உலகத்திற்கான பிரமாணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். "அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரயேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது, நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எபிரெயர் 7:12, எரேமியா 31:33)

# தீர்க்கதரிசனத்தில் இன்று ஆயிரவருடத்தின் திட்டம்

"இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார், அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களுக்கும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் இராஜரீகமும் கொடுக்கப்பட்டது, அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய இராஜ்யம் அழியாததுமாயிருக்கும்" (தானியேல் 7: 13, 14)

ஆயிரவருட திட்டம், 1996 இல் ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்திற்கான அமெரிக்க கவுன்சிலின் கீழ் நிறுவப்பட்ட உலகளாவிய பங்கேற்பு சிந்தனைக் குழு, 2009 இல் சுதந்திரமடைந்தது. இதன் நோக்கம் உலகம் முழுவதும் உள்ள எதிர்காலவாதிகளை இணைத்து, மனுக்குலத்தின் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான தீர்வுகளைக் கண்டறிவதாகும். இது ஒரு அரசு, ஒரு பிரச்சினை, அல்லது ஒரு கொள்கை அல்ல, மாறாக அனைத்து மனுக்குலத்திற்கும் சார்ந்த ஒரு சிந்தனைக்குழுவாக தன்னை அறிவிக்கிறது. தி ஸ்டேட் ஆஃப்ஃபியூச்சரின் 19 பதிப்புகளை இந்த திட்டம் ஒன்பது முக்கிய மொழிகளில் வெளியிட்டுள்ளது. செப்டம்பர் 15, 2024 அன்று வெளியிடப்பட்ட 20 -ம் பதிப்பின் அறிமுகம் பின்வருமாறு-

"இது மனுக்குலத்தின் எதிர்காலம் பற்றிய சிக்கல்கள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய பரந்த, விரிவான பார்வையையும், மோசமானதைத் தவிர்க்கவும் நாகரீகத்தின் எதிர்காலத்திற்கான சிறந்ததை அடையவும் இன்று நாம் தெரிந்து கொள்ள வேண்டியவையும் வழங்குகிறது. மில்லினியம் ப்ராஜெக்ட், உலகளாவிய பங்கேற்பு சிந்தனைக் குழு, எண்ணற்ற ஆராய்ச்சி அறிக்கைகள், நூற்றுக்கணக்கான எதிர்காலவாதிகள் மற்றும் உலகம் முழுவதும் தொடர்புடைய நிபுணர்களின் நுண்ணறிவுகள் மற்றும் அதன் சொந்த எதிர்கால ஆராய்ச்சிக்கான 70 அறிக்கைகள் அனைத்தையும் இணைத்து, இந்த அறிக்கையை மகத்தான மதிப்புடையதாக உருவாக்கியது. இது நாகரிகத்திற்கான வாய்ப்புகள் பற்றிய ஒரு நிர்வாக சுருக்கத்தை வழங்குகிறது."

உலகத்தைப் பற்றிய அதன் பூகோளவாதக் கண்ணோட்டம், உலகம் மேம்பட்டு வருவதாகவும், 2035 இல் உலகம் இன்று இருப்பதை விட சிறப்பாக இருக்கும் என்றும் முடிவு செய்கிறது. 2045 "அழகான எதிர்காலத்தை" கொண்டு வரும். மற்ற முடிவுகள்-

● இன்று வாழும் பெரும்பாலான மக்கள் 2050 இல் உயிருடன் இருப்பார்கள், இன்று பிறக்கும் பெரும்பாலான குழந்தைகள் 2100 ஆம் ஆண்டைப் பார்ப்பார்கள்.

● பயங்கரமான நிகழ்வுகளில் ஊடகங்கள் கவனம் செலுத்தினாலும், உலகின் பெரும்பான்மையான மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்.

● உலக அறிவின் பெரும் பகுதி 60 சதவீதத்திற்கும் அதிகமான மனுக்குலத்திற்கு இலவசமாகக் கிடைக்கிறது.

● ஜனங்கள் ஆரோக்கியமாகவும், செல்வந்தர்களாகவும், சிறந்த கல்வியறிவு பெற்றவர்களாகவும் நீண்ட காலம் வாழ்பவர்களாகவும், சிறந்த தொடர்பு கொண்டவர்களாகவும் உள்ளனர்.

● ஆயுட்காலம் 60 ஆண்டுகளில் இருந்து 73 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. உலக எழுத்தறிவு 68 சதவீதத்தில் இருந்து 88 சதவீதமாக உயர்ந்துள்ளது. உலகில் 90 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் மின்சாரம் பெறுகின்றனர். 1980 இல், கிட்டத்தட்ட யாருக்கும் இணையதளத்தை அணுகுவதற்கு வாய்ப்பு இல்லை, இன்று கிட்டத்தட்ட

5.5பில்லியன் பேர் ஆன்லைனில் உள்ளனர். உலகப் பொருளாதாரம் தற்போது கிட்டத்தட்ட $110 டிரில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது, இது 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட மூன்று மடங்கு அதிகமாகும்.

அறிக்கை, சிக்கலான உலகளாவிய சூழ்நிலையை வழிநடத்தவும், அனைவருக்கும் மேலும் நிலையான, சமமான அன்பான எதிர்காலத்தை உருவாக்கவும் ஒரு சாலை வரைபடத்துடன் முடிவடைகிறது.

**எதிர்காலம் பிரகாசமாக இருக்கிறதா?**

உலக வங்கி அறிக்கையின்படி, 2015 ஆம் ஆண்டின் தீவிர வறுமையில் உலக மக்கள் தொகையில் 10 சதவீதம் மட்டுமே பாதிக்கப்பட்டிருந்தனர், இதற்கு முன் 1980 ஆம் ஆண்டில் தீவிர வறுமை வந்தபோது, உலக மக்கள் தொகையில் பாதிக்கு மேல் பாதிக்கப்பட்டனர் (ஒரு நாளைக்கு $ 1.90 க்கு குறைவாக வாழ்ந்த நிலையில் இருந்தனர்) இருப்பினும், உலகப் பிரச்சனைகள் நீங்கவில்லை. 2023 ஆம் ஆண்டில், உலகெங்கிலும் கிட்டத்தட்ட 700 மில்லியன் மக்கள் ஆண்டுக்கு $785க்கும் குறைவாக கொண்டு வாழ்ந்தனர். 2023 ஆம் ஆண்டில் உலகளவில் ஆண்டுக்கு 60 மில்லியனை மிஞ்சிய மரணங்கள் ஏற்பட்டது என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது. மரணங்களுக்கு வழிவகுக்கும் முக்கியமான 10 காரணங்களில் ஏழு தொற்று அல்லது நோய்களாகும், இவை மொத்த மரணங்களில் 38 சதவீதத்திற்கும், அல்லது முதல் 10 காரணங்களில் 68 சதவீதத்திற்கும் காரணமாக உள்ளது. இன்று உலகில் 8 பேரில் ஒருவர் மனநலக் கோளாறுடன் வாழ்கிறார்கள். 2022 ஆம் ஆண்டில், வேண்டுமென்றே செய்யப்படும் கொலைகளின் உலகளாவிய விகிதம் 100,000 பேருக்கு 5.61 ஆக இருந்தது. 2021 - ல் உலக அளவில் கொலைகள் 4,75,000 க்கும் அதிகமாக உயர்ந்துள்ளதாக ஐ. நா செய்திகள் தெரிவித்துள்ளன. உலகளவில் 165,273 அரசியல் வன்முறை நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, இது முந்தைய 12 மாதங்களை விட (ஜூலை 2023 முதல் ஜூன் 2024 வரை) 15% அதிகரிப்பைக் குறிக்கிறது. மில்லினியம் திட்டம் உலகிற்கு சமத்துவத்தின் நம்பிக்கையை அளித்தாலும், நோய் மரணம் அல்லது போரிலிருந்து எல்லா ஜனங்களையும் அது ஒருபோதும் விடுவிக்க முடியாது. தெய்வீக தலையீடு மட்டுமே அத்தகைய அற்புதத்தை நிகழ்த்த முடியும்.

**வேதத்தில் காணப்படும் மில்லினியம் (ஆயிரவருட ஆட்சி)**

ஆயிரமாண்டு யுகம், அதன் இயல்பு,



பண்புகள், சட்டங்கள் மற்றும் தேவன் தனது சட்டங்களை மனிதர்களின் இருதயங்களில் எழுதும் விதம் பற்றிய விவரங்கள், முக்கியமாக ஐந்து தீர்க்கதரிசன புத்தகங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன - ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் மற்றும் சகரியா. உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள்" எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள்" என்று இந்த யுகத்தை பற்றி பேதுரு அப்போஸ்தலர் 3:19-21இல் கூறுகிறார். இவ்வாறு, முதற் தீர்க்கதரிசியான ஏனோக் (யூதா 14) மற்றும் அவரைத் தொடர்ந்து வந்தவர்கள் அனைவரும் ஆயிரமாண்டு இராஜ்யத்தை குறிப்பிட்டனர். இருப்பினும், கிமு 8 மற்றும் 4 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் வாழ்ந்த இந்த ஐந்து



தீர்க்கதரிசிகளுக்குத்தான் தேவன் தனது பரிசுத்த ஆவியின் மூலம் வரவிருக்கும் இராஜ்யத்தை பற்றிய விரிவான விளக்கங்களைக் கொடுத்தார். இந்த தீர்க்கதரிசனங்களில், புதிய உடன்படிக்கையின் மூலம் பூமி மீட்டெடுக்கப்படும் உண்மையான ஆயிரமாண்டு திட்டத்தின் விரிவான விளக்கங்களை காணலாம்.

பழமையான நம்பிக்கையின் மனமார்ந்த வெளிப்பாட்டை இயேசு தனது மாதிரி ஜெபத்தை வழங்கியபோது மீண்டுமாக கூறினார், அதில் தேவனின் பூமிக்குரிய இராஜ்யத்திற்கான தனது விருப்பத்தையும் வெளிப்படுத்தினார் (மத்தேயு6:10) அதற்கு பிறகு ஒவ்வொரு தலைமுறையும் இந்த விண்ணப்பத்தை மீண்டும் கூறி வந்துள்ளது, அதில் அனைத்து மனிதர்களின் இருதயங்களில் இருந்து தீமை நீக்கப்படும் நேரத்தை எதிர்நோக்கி, "அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா31:34) என்ற தீர்க்கதரிசினம் நிறைவேற விண்ணப்பிக்கிறது.


இந்த உலகத்தின் இராஜ்யங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கு இடம் கொடுக்கும் காலம் வருகிறது, பூமியின் தேசங்கள் அந்த இராஜ்யத்தின் வெளிச்சத்தில் வாழும் (வெளிப்படுத்துதல் 11:15, 21:24) சர்வ வல்லமையும் நீதியுமான மெசியாவின் ஆட்சியின் ஆசீர்வாதங்கள், வாழ்வும் மரணமும் தொடர்பான கேள்விகளை பூமியில் பிறந்த யாவரும் எதிர்கொள்ளும் நிலைக்கு கொண்டுவரும். பரலோக உலகின் ஒரு பகுதியாக மாறும் நம்பிக்கையில், "கிறிஸ்துவுடன் இருக்க", விசுவாசிகள் உலகத்தை தேவனுடைய ஒப்புரவாக்க உதவுகிற தலைவர்களாகவும் ஆசிரியர்களாகவும் பயிற்சியளிக்கப்படுகின்றனர். ஏசாயா (ஏசாயா 35:8)விவரித்த நியாயத்தீர்ப்பு வேலை இராஜ்ய ஆசீர்வாதங்களை வழங்கும் அதே நேரத்தில் நடைபெறும். நீதியின் போதனை அதி விரிவாக இருக்கும், தேவனின் சட்டம் அனைத்து மக்களின் இருதயங்களிலும் எழுதப்படும். (எரேமியா 31:33, 34) யுகங்கள் முழுவதும் பாவம் மற்றும் மரணத்தின் அனுபவம் ஒரு சோதனையான ஒன்றாக இருந்து வருகிறது. மேலும் மனித சுயநலம் "ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும்" தொடர்ந்து வருகிறது (லூக்கா21:25 )பாவத்தின் கடுமையான பாடங்கள், கிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் ஜனங்களுக்குக் கொடுக்கப்படும் வாழ்க்கையின் ஆசீர்வாதத்தைப் போற்றும் உணர்வை ஏற்படுத்தும். இந்த அனுபவத்தின் மூலம் தெய்வீகச் சட்டத்தை மீறுவதால் ஏற்படும் பயங்கரமான விளைவுகளை அனைத்து மனுக்குலமும் கற்றுக்கொள்ளும். மாறாக, இராஜ்ய ஆசீர்வாதங்கள் அவர்கள் மீது பொழிந்தெடுக்கப்படும் போது, அவர்கள் தெய்வீக நன்மையைக் கற்றுக்கொள்வார்கள், மேலும் அவர்கள் அன்று "இதோ, இவரே நம்முடைய தேவன், இவருக்காகக் காத்திருந்தோம், ... இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம்" என்று சொல்லுவார்கள். (ஏசாயா 25:6-9)

இராஜ்யத்தின் ஆட்சியில் மகிழ்ச்சி, சமாதானம் மற்றும் அன்பு ஸ்தாபிக்கப்படும். உலகின் ஒவ்வொரு மூலையிலும் ஜீவன் விரிவடையும். அதன் குணப்படுத்தும் சக்தி ஒவ்வொரு மருத்துவமனை படுக்கையையும் காலி செய்யும். அதன் உயிர்

கொடுக்கும் ஆற்றல் ஒவ்வொரு கல்லறையிலும் சென்றடையும். அனைத்து பார்வையற்ற கண்களும் திறக்கப்படும், அனைத்து கேட்காத செவியும் திறக்கப்படும். (ஏசாயா35:5 ) இனி சாத்தான் மக்களை ஏமாற்றவோ அல்லது தவறாக வழிநடத்தவோ அனுமதிக்கப்பட மாட்டான். அவனது சுயநலம் மற்றும் வெறுப்பு ஆட்சி தேசங்களின் அமைதியையும் மகிழ்ச்சியையும் மேலும் அழிக்க அனுமதிக்கப்படாது. கிறிஸ்துவின் இராஜ்யத்தின் கல்வித் திட்டத்தின் விளைவாக, உலகம் சுயநலம் மற்றும் வெறுப்பை விட அன்பு மற்றும் இரக்கத்தின் நன்மைகளைக் கற்றுக்கொள்ளும், தங்களால் முடிந்த அனைத்தையும் தங்களுக்காகப் பெறுவதற்குப் பதிலாக, ஆழ்ந்த மற்றும் நீடித்த மகிழ்ச்சின் உண்மையான ரகசியம் மற்றவர்களுக்குத் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்வதால் உள்ளது என்பதை ஜனங்கள் அறிந்துகொள்வார்கள். உண்மையிலேயே அழகான எதிர்காலம்!

தனிச்சுற்றுக்கு மட்டும்

மேலும் தகவல் மற்றும் புத்தக தேவைகளுக்கு தொடர்பு :



## Light Out of Darkness

"The light has been sown for the righteous
And gladness for upright of heart."
In the darkness now covering the people
The children of light have no part.

"The path of the just" is bright-shining,
Even the narrow the way.
The wicked alone dwell in darkness –
God's children are those of the day.

The light of the world was our Saviour.
Then the Gospel he taught us God's plan
He showed how he'd die and must suffer
In order to save every man.

We have been called out of darkness
Into his marvelous light.
In the day let us therefore keep walking,
Thus dispelling the darkness of night.

Alice M. Ripper